# வானமுதம்

358

ஆண்டவன் நூலகம்

லட்சுமிபுரம் :: சென்னை-14

எஸ். டி. சுந்தரம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வானமுதம்





முதல் பதிப்பு: ஜூலை '64.


© உரிமை பெற்றது.

விலை ரூ. 3 00

அச்சகம் :
சுதேசமித்திரன்
சென்னை


தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்

—பொதுமறை.




# அண்ணல் காமராஜ் அவர்கட்கு
# அன்பின் காணிக்கை

ஜூலை 15, 1964



# அணிந்துரை

(பேராசிரியர் ரா. ஸ்ரீ. தேசிகன், M.A.)

திருவாளர் எஸ். டி. சுந்தரம் அவர்களைப் பல ஆண்டுகளாக நான் நன்கறிவேன். அவர் பண்டைய இலக்கியங்களின் வான் நயங்களைப் பருகி, அவற்றில் ஆழ்ந்து திளைத்தவர் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. தமிழின் தொல் மரபு ஓராது யாதொரு வரம்புமின்றிக் கவிதை புனையும் திருக்கூட்டத்தை அவர் சார்ந்தவரல்லர் என்பது அவர் படைத்த 'வானமுத' மென்னும் கவிதைத் தொகையின் வாயிலாக மிளிராமற்போகாது.

பழுத்த சொல்லாட்சியும், உயர்ந்த கற்பனைச் செறிவும், சிறந்த நாட்டுப் பற்றும், உணர்ச்சி வெள்ளப்பெருக்கும், சமுதாயச் சாக்கடைத்தேக்க சூழல்களைநோக்கி வெகுண்டு கூறும் அவர் தம் மொழிகளும், தியாகமே உருக்கொண்டு நம்முன் நடமாடின, சான்றோர்களின் இயல்பைச் சித்தரிக்கும் அவருடைய பண்பாடும், கயவர்களை அம்பலப்படுத்தும் அறச் சீற்றமும், சீனப் படையெழுச்சியாம் காட்டாற்றிற்கு அணைபோட அவர் எழுப்பும் வீரக்கனலும், அவருடைய நகைச்சுவையும் இந்நூலில் கோயில்கொண்டுள்ளன. இயற்கையின் எழில் பொழியும் காட்சிகளும், அமர ஒலிகளும் அவருடைய உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுவதை உணர்கின்றோம்.

**'வண்ணவான் திரையிலே வளர்பிறை**
**ஒளிகாட்டி'**
**'கடையூழிக் காலக் கனலைக்**
**கக்கி யெழும்'**

'உள்ளத்து வீதியிலே உலவுகின்ற
கவியரசன்
வேய்ங் குழலின் விண்ணிசையில்
வீணைதரும் சுகநாதந் தன்னில்
இறந்தது ஒருநாள் ஆங்கே
இரவெனும் பறவை வந்து....
துயர் எனும் தொட்டிலிட்ட தூங்காத
குழந்தை போல'
கடமையெனும் போர்க்கவசம் பூண்
டெழுந்தோம்'
இதயத்தின் சிறுவைமீது ஈகையை
மாய்த்துவிட்டாய்!'

இவைபோன்ற சிறந்த செஞ்சொற்றொடர்களில் புகலரும் ஒரு கவிதை இன்பம் அருவியாகப்பாயக் காண்கின்றோம்.

'கம்பன் கண்ட குடியரசு' என்னும் கவிதை போற்றுதற் குரியது. இதைச் சித்தரிப்பதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு நம் நாட்டில் மண்டிக்கிடக்கும் தீச்செயல்களை நம் கண்முன் நிறுத்துகின்றார்.

'வையக ஊஞ்சல்' என்னும் கவிதையில் சிறந்த கற்பனை சிறகடித்து உலாவுகின்றது.

'சூரிய சந்திர தாரகை யாவும்-நம்
திருமண மண்டப தீபங்களாம்
வானகமே நம் மாளிகையாம்—இன்ப
வையக ஊஞ்சலில் ஆடிடுவோம்!'

என்னும் வரிகளில் உண்மைக் கவிநயம் ததும்புகின்றது.

'வானமுதம்' என்னும் கவிதையில் ஒரு கவிஞனுக்கும் விஞ்ஞானிக்கும் நிகழ்ந்த உரையாடல் மிகக் கவின்பெறச் செஞ்சொற்களில் சிறைப்பட்டுக் கிடக்கின்றது. அறிவு வளர்ந்ததே ஒழிய அதற்கேற்ப அன்பு மலரவில்லை. அறிவும் அன்பும் கைகோத்து நடமாடும் நிலையில்தான் உலக அமைதி நிலை நிற்கும் என்று கூறும் பொன்மொழிகள் நம் உள்ளத்தைக் கவராமற்போகா. உலகத்தை அன்பைக் கொண்டே ஓர் அமரநாடாக ஆக்க முயலும் ஒரு கவிஞ

னுக்குத்தான் இறுதியில் வெற்றிகிடைக்கும் என்பதை இந்தச் சிறந்த கவிஞர் வலியுறுத்துகின்றார்.

‘காலமெனும் சிற்பி செய்யும்
 கவிதைத்தாய்க் கோயிலடா
கோலமின்னும் இயற்கையருள்
 கோடி மலர்த் தோட்டமடா
ஓலமிடும் மானிடனே
 உன்னறிவின் ஊட்டமடா
சோலையெழும் ஞானவெளி
 சங்கீதம் கேட்டிடடா!’

என்று கவிஞன் தொடங்கும் வரிகளுக்கேற்றவாறு மற்றைய வரிகளும் எதிரொலி கொடுக்கின்றன.

இவர் சமைத்த கவிதைகள் செவிக்கும், சிந்தைக்கும் நல்லதொரு விருந்தாய் அமைகின்றன. இவற்றை நன்கு சுவைக்கும் தமிழுலகம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டு நிற்பதில் யாதொரு வியப்புமில்லை.

திருவல்லிக்கேணி,
9-6-1964.

ரா. ஸ்ரீ. தேசிகன்.

★

## வானமுதம் தந்தான்

காந்திமகான் அறநெறியில் கடமை செய்வோன்
காலமெலாம் பிறநலமே கருதி வாழ்வோன்
தீந்தமிழ்ச் செல்வன்! தேச விடுதலைக்கே
சிறைபுகுந்தோன்! தகையாளன்! எஸ்.டி. சுந்தரன்
மாந்தர்கட்கே வானமுதம் தந்தான்! இஃதை
மனத்தினுக்கும் செவிக்கும் உணவாகக் கொண்டோர்
மாய்ந்தொழியும் இழிநிலையிற் சேரார் என்றும்
வானோராய் விளங்கிநிற்பர் மாநிலத்தின் மீதே!

— கவி ஆறுமுகனார்

# PREFACE

A collection of poems by Sri. S. D. Sundaram is appearing in book form now entitled "வானமுதம்". Sri. S. D. Sundaram is well-known in Tamilnad as poet, patriot and play-wright. His love of Tamil literature is deep and his contribution to Tamil literature is extremely valuable and useful.

Sri. S. D. Sundaram belongs to the galaxy of Tamil poets who are inspired by poet Subramania Bharathi. Even a casual reading of his poems will show his poetic fervour and creative urge.

In the valuable collection of poems the two which will shine as scintillating diamonds are

1. கவிபாடும் கலைக்கன்னி
2. காலத்தின் எல்லையிலே...

His poems are extremely readable, full of rythm and brilliant with illimitable expression. This book is a real contribution to Tamil poetry.

NALLAPERUMAL.

# கவிபாடும் கலைக்கன்னி!

(கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு)

"காலம் ஆண்டுக்கு 6 முறை மாறுகிறதே; கவிஞன் ஆண்டுக்கு ஒரு முறையாவது மாறவேண்டாமா?"

என்பது இப்போது சில அரசியல் கவிஞர்கள் கடைபிடித்து வரும் தத்துவம். ஆனால், கவிஞர் திரு. எஸ். டி. சுந்தரம் எம். எல். சி., அவர்களின் கவிதைகள் சென்ற 25 ஆண்டுகளாக ஒரே ஒழுங்கில் ஒரே வீரத்துடன் தங்குதடையின்றி ஓடிக்கொண்டிருக்கிறது. ஆத்தூர் சுந்தரத்தின் கவிதைகளில் ஆற்றோட்டம்போன்ற வேகமும், உபயோகமும் இருக்கின்றது.

நாடு இன்றுதான் சோஷலிஸப் பாதையை ஒப்புக்கொண்டு இருக்கிறது. சுந்தரம் அந்தநாள்முதல் வாழ்க்கையில் அதை கடைப்பிடிப்பவர். தனது முதல் வகுப்பு டிக்கெட்டுகளை, மூன்று 3–ம் வகுப்பு டிக்கெட்டுகளாக அவர் மாற்றிக்கொண்டதும் உண்டு. தன் கையில் ஒரு ஆளுக்கு மட்டும் சாப்பாட்டுக்கு பணம் இருக்கும்பொழுது, அதற்கு கடலை வாங்கி 8 பேர்கள் பங்கிட்டுக்கொண்டதும் உண்டு. இறைவனிடம் இடையருத பற்றும், கலைகளில் ஈடுபாடும் அவருக்கு உண்டு. "கலைகள் நலமே செய்தல் வேண்டும்" என்ற அசட்டு தத்துவத்துக்கு அவரும் இரையானவர்.

பாருங்களேன், புத்தகத்தின் தலைப்பை 'வானமுதம்' ஆண்டவன் நூலகம். இவையெல்லாம் இந்த 1964-க்கு பொருந்துமா?

உண்மைதான். "யான்பெற்ற இன்பம் பெருக இவ் வையகம்" என்ற முதுமொழியே சோஷலிஸம்தானே. அதில் இருக்கின்ற முழுமையை நாம் இப்போது பேசும் சோஷலிஸத்தில் காணமுடிகிறதா? அந்த முதுமொழியேதான் சுந்தரம்.

"நாவுக்கு இசைந்தால் பாவுக்கு இசையும்" "பட்டுப்போல் உறுதியும், மெருகும் பாட்டில் இருக்கவேண்டும்." "பாட்டைப் படித்துக்கொண்டு வரும்போது இலக்கணம் நான் இருக்கிறேன் என்று இடையே கூறக்கூடாது" என்றெல்லாம் கவிஞர்கள் இலக்கணம் கூறுவார்கள். ஸ்ரீமான் சுந்தரத்தின் "கவிபாடும் கலைக்கன்னி!" என்ற பாட்டில் "வியாபாரி கவியானால், விவசாயி என்ன ஆவான்?" என்ற

ஒரு இடத்தை வைத்துக்கொண்டு 2 பக்கங்களுள் விமரிசனம் எழுதலாம். கவிதை என்பது வியாபாரமில்லை. அது வெறும் உணவுமில்லை. உணவுக்கும் உயிருக்கும் அப்பாற்பட்டது கவிதை.

பசித்தவனும் பாடுகிறான். சுந்தரத்தின் மேற்கண்ட வரிகளிலே கண்டதை எல்லாம் படித்துவிட்டு, படித்ததை பாட்டாக மொழிபெயர்த்து பலசரக்குக்கடை வைத்து விற்காதீர்கள் என்கிறார். பாட்டுக்கு வார்த்தைகள் பொறுக்கிப் போடுவது ஒரு அழகு. தகரத்தில்போட்ட கற்களைப்போல், பாட்டுகள் கடமுட என்று சத்தத்தை உண்டாக்கினால் அதில் உள்ள கருத்துகள்கூட இந்த சத்தத்தில் மறைந்து போகும்.

"சங்கீதம் பாடுகையில் சந்தேகம் வரலாமா?" என்கிறார் சுந்தரம்... யாருக்கும் தெரியாத அழகு இருந்து யாது பயன்? நாம் பாடுவது யாருக்காக? நமக்கும் புரியாமல் பிறருக்கும் புரியாமல் பாடுவது ஒரு பாட்டா என்று மேற்கண்ட வரிகள் சுவையாக தெரிவிக்கின்றன.

"உரத்த குரல் எடுத்து உயிர் உருகப் பாடாயோ" "திருவாய்மொழியின்பத்தேனாற்று வெள்ளத்தில் ஒரு வாயும் போதாதா? உலகம் பசி தீராதா?" என்று கேட்கிறார். "அஸ்திவாரம் இல்லாத கட்டடம் நிலைக்காது. ஆண்டவன் அருளை அஸ்திவாரமாகக் கொள்ளாத கவிதைகள் நிலைக்க முடியாது. கல்லையும் மண்ணையும் பற்றிப் பாடிய கவிஞன், கல்லும் மண்ணுமாகப் போய்விடுகிறான். ஆனால் கல்லில் இருக்கும் சிலையைப் பாடினவன், சிலை உள்ள வரையிலும் ஜீவனோடு இருக்கிறான்.

தவக்கோமான் பாரதியைத் தந்த தமிழ்த்தேன் பருகும் சுந்தரத்தின் பாடல்களில் பாரதியின் பக்திப்பெருக்கும், வீரமும் ஊற்றெடுத்தோடுகிறது. திரு. சுந்தரம் அவர்கள் பாடிய பாட்டுக்கு பாட்டால்தான் விமரிசனம் செய்யமுடியும்:

கன்னிப் பெண்ணைக் கண்டதோக்கிருக்கு—அதில்
    கடவுள் அருளிய வாக்குஇருக்கு
தென்னங் குரும்பைப்போல் அழகிருக்கு—அதில்
    தேங்காயின் பூரணம் தானிருக்கு
கன்னித் தமிழ்த் தொண்டர் வாழியவே—எங்கள்
    கவிஞர் சுந்தரம் வாழியவே!

கொத்தமங்கலம் சுப்பு.

# பல்லாண்டு!

(கவிஞர் திருலோக சீதாராம்)

குழந்தை விழியில், குளிர்நீரில், கரைநிழலில்,
கொட்டும் அருள்மழையில், குழலூதும் காற்றிசையில்,
அழலின் சுவையில் அண்டப் பெருவெளியில்
ஆர்க்கும் குரலை, அழகலையை, அமுதத்தை
விழையுங் கவியுள்ளம் வெட்டிப் பொழுதுருட்டும்
வீணர்களைச் சீறும், வெந்தணலும் தானுமிழும்
பழகுதமிழ் 'வானமுதம்' பாரிக்கும் சுந்தரனின்
பண்மகிழ்ந்து பயனுண்டு பல்லாண்டு கூறுதுமே.

— கவிஞர் திருலோக சீதாராம்.

# பாராட்டு

கவிஞர் 'சோமு'

திரு. எஸ். டி. சுந்தரம் அவர்களின் கவிதை நூலைப் பார்த்ததும் இந்த ஆசிரியருக்குப் பழமைப் பண்போடு தோய்ந்த வழிமுறைகளில் எவ்வளவு பிடிப்பு இருக்கிறது என்பதுகண்டு இன்பமுற்றேன்.

அன்னை, தந்தை, குரு, தெய்வம், நாடு என வகைப் படுத்தி ஆரம்பமாகிறது இந்த நூல்! இவ்வரிசையமைப்பி லேயே நூலாசிரியரின் இதயப்பண்பு துலங்குகிறது என்று சொன்னால் பொருந்தும்!

**உலகமெனும் ஓவியமே! உறைந்துவிட்ட தீப்பந்தே**
**கலகமிலா வான் சுழலும் காந்தமணி மண்டலமே!**
**கலிகண்ட நாடகமே கயிறில்லாப் பம்பரமே**
**கலைக்கன்னி உனையெண்ணிக் கவிபாடி ஆடுகிறாள்!**

என்னும் வரிகளைப்போலே இந்த நூலிலுள்ள கவிதை களில் என்னைக்கவர்ந்த பாடல்களும், வரிகளும் சொற் கோவைகளும் பற்பல!

**சிங்க நாதம் கேட்குது! சீனநாகம் ஓடுது!**

என்ற பாட்டு, சீன ஆக்கிரமிப்புச் சூழ்நிலையில் வெற்றிக் குரலாக ஒலித்த வரலாற்றை நாடெல்லாம் அறியும்.

மனிதனாக வாழத் தெரியாதவன் கவிஞனாக வாழ்வது எப்படி? பண்புள்ள மனிதன் பண்புள்ள கவிஞனாக மலர் வதை வணங்குகிற நாடு நம் தமிழ்நாடு. இந்த உண்மையை எண்ணத்தாலும், சொல்லாலும், நடத்தையாலும் நாள் தோறும் கடைப்பிடித்து வருகிற பண்பாளர் திரு. சுந்தரம்! அவருடைய முயற்சிகள் வெல்லவேண்டும் என்று விரும்புவது மனமுவந்த ஓர் மகிழ்ச்சியாகும்.

மயிலாப்பூர்,
20—6—64.

மீ. பா. சோமசுந்தரம்.

# தோற்றுவாய்

(திரு. கு. ராஜவேலு, M.A.)

மண்ணகத் தாயின் வளத்தை வானோங்கிய மரங்களிற் காணலாம். பச்சைப் பசேலென்று பரந்து கிடக்கும் பசும் புல்லிலும் அதன் மாட்சியைப் பார்க்கலாம். ஊர்வாழ உலகம் வாழக் கவிதை பாடும் உயர்ந்த உள்ளத்தை, பாடிய கவிதையில் உணரலாம். அக்கவிதையின் கனிச்சுவையில் மனிதகுலத்தின் இன்பதுன்பங்களைத் தெள்ளத்தெளியலாம்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் ஓட்டம்போன்ற தெள்ளிய நடை. அதன் இருமருங்குர் விரிந்து நிற்கும் காவினம்போல் கவின்பெற்ற கருத்துக்கள்! வானில் வரும் தண்மதியும், எண்ணிலா விண்மீன்களும், இடையிடையே எழில் வீசிப் பறந்து செல்லும் வண்ண முகில்களும், சகோதரர் எஸ். டி. சுந்தரம் அவர்களின் கவிதையிலே ஒளி வீசி நிற்பதைப் பார்க்கலாம்.

நாட்டின் தாழ்நிலைகண்டு அந்நாளில் தணலாய் எரிந்தவர் அவர். கங்கையாய்ப் பொங்கியவர் அவர். அதன் பயனாய் வெள்ளையனின் அணையாம் சிறையிலே அடைபட்டுக் கிடந்தவர். அந்தத் தேசபக்திக் கனல் கொந்தளிக்கின்ற உள்ளத்திலே எத்தனையோ அனற்பொறிகள் சிந்திப்பறந்தன. எத்தனையோ தளிர்கள் இளவேனிற் காலத்தில் தளிர்ப்பதைப் போல் தளிர்த்தன, அரும்புகள் முகிழ்த்தன, மலர்கள் மலர்ந்தன. அவற்றிலே சிலவற்றை நமக்குக் கொய்து "ஆண்டவன் நூலகத்தார்" கொடுத்திருக்கின்றார்கள்.

[illegible] பணியைச்செய்த அவர்கள் பாராட்டத்தக்கவர். [illegible] பாட்டின் சுவையை நூலின் தொகுதியை விரித்ததுமே [illegible] சுவைக்கலாம்:—

பூவிரியும் புதுமணமும் பெருமழையும்
அமுதூறும் வானதியும் வைகையாறும்
பாவிரியும் கதிர்மதியும் பழமலையும்
பசியவயல் புதுஉலகும் புகழுலாவும்
காவிரியும் காட்சிகளும் கனகமணி
கோபுரமும் கண்டுள்ளம் கவிதைபாட
மாவிரியும் மண்மீது மைந்தன் எனைப்பெற்று
மகன் என்றழைத்த தாயே!

என்ற பாட்டில்தான் எத்துணைப் பாவளம் நிறைந்துள்ளது.

இவ்வாறு நூல்நெடுகிலும் இன்பச்சுவை விரிந்து செல்கிறது. கரும்பின் நுனியிலிருந்தே சுவை மென்மேலும் பெருகுவதுபோல், நூலின் முதலிலிருந்தே கவிதைச்சுவை பெருகுகிறது. தமிழ்ப் பெருமக்கள் பண்பட்ட இந்தக் கவியின் "வானமுத"ப் பாடல்களைப் படித்து இன்பம் துய்ப்பர் என்று நம்புகிறேன். வாழ்க கவிஞர் எஸ். டி. சுந்தரம்! வாழ்க தமிழ்! வாழ்க தமிழ் மக்கள்! வாழ்க வையகம்!

சென்னை,
22—6—64.

கு. ராஜவேலு.

# முன்னுரை

அன்பும் அறமும் தரும் இன்பமும் இரக்கமுமே மனித வாழ்வின் அடித்தளங்கள். இப்பெரும் பண்பே தெய்வ தத்துவத்தோடு மானிட சித்தத்தை இணைக்கிறது.

இந்த அடித்தளத்தில் கெடுதல் ஏற்பட்டால் வாழ்க்கை பழுதுபட்டுவிடும். மானிடக் கட்டிடமே ஆட்டங் கண்டு விடும்! அளவுக்கு மீறிய குடிகாரன் அன்னைக்கு முன்னே ஆடுவதுபோல், சமுதாய வாழ்க்கை சான்றோர் முன்னிலையிலேயே சதிராட ஆரம்பித்துவிடும்! அதன் விளைவு பயங்கரமாக முடியும்.

அப்படியெல்லாம் பாரத சமுதாயம் வழிதவறிப் போய் விடக்கூடாது என்பதே ஆன்றோர் நமக்கிட்ட கட்டளை! இந்த ஞானபூமியை அவ்வளவு எளிதில் எவராலும் கெடுத்து விடவும் முடியாது. என்றாலும் எச்சரிக்கை வேண்டும்.

கேவலம் உண்ணுவதும், உறங்குவதும், ஜனத்தொகை பெருக்குவதும், சாவதும், பிறப்பதும், சங்கடப்படுவதும் மட்டுமல்ல வாழ்க்கை.

பிறப்பின் பெருங்காரியங்களை ஆற்றவேண்டும். இறவா த இலட்சியங்களை அடையவேண்டும். நினைப்பின் நீண்ட செயல்களை நிரந்தரச் சின்னங்களாக்கவேண்டும்.

வேத ரிஷிகளும், சங்கப் புலவர்களும் கண்ட ஞானச் செல்வங்களை ஞாலமறிய நல்கும் பண்பாட்டுத் தகுதியை சுதந்திர பாரதம் பெற்றேதீரவேண்டும். இமயமும், குமரியும் கண்ட தருமத்தின் செல்வம் வடதுருவ முதல் தென்துருவம் வரை உறவு கொள்ளவேண்டும். இது முடியும்.

காலத்தையும், தூரத்தையும் வென்றுவிட்ட மனிதன் சந்திர சூரிய தாரகைகளைத் தொடுவதைவிட தன்னுள்ளத்

தையே தொட்டுப் பார்த்தால் ஆங்கு ஆயிரமாயிரம் எண்ண ஒளிகள் தெரியும்! வான கீதங்கள் கேட்கும்! வெற்றி முரசுகள் முழங்கும்! வீர காவியங்கள் ஓவியங்களாகத் திகழும்!

ஆசிய ஜோதியான பண்டித நேருவின் பெருமுயற்சியால் இந்த உலகமே போற்றும் நிலையில் பரவி நிற்கும் பாரதப் பண்பாடு மனித நாகரிகத்தின் தெய்வ நாதம். அது வற்றாத 'வானமுதம்'. சாந்தியின் சமரச கீதம். அதை வடித்தெடுக்க இச்சிறு உயிரால் முடியுமா? ஏதோ எண்ணச் சிறையிற்கிடந்த இந்தச் 'சிற்றாறு' வெளிவருகிறது.

**"வானமுதம்" என்ற இந்நூலை சேவையின் வீர உருவமாகத் திகழும் தலைவர் திரு. காமராஜ் அவர்களின் பிறந்த நாள் பரிசாக சமர்ப்பிக்கிறோம்.**

அணிந்துரை, முன்னுரை அளித்துதவிய அறிஞர்கள் திருவாளர்கள் ரா. ஸ்ரீ. தேசிகன், மீ. ப. சோமசுந்தரம், எஸ். நல்லபெருமாள், கு. ராஜவேலு, கொத்தமங்கலம் சுப்பு, கவி ஆறுமுகனார், கவிஞர் திருலோக சீதாராம் ஆகியவர்கட்கும் இந்நூலை வெளியிடும் ஆண்டவன் நூலகத்தாருக்கும், அச்சிட்டு உதவிய சுதேசமித்ரன் அச்சகத்தாருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

'கலை பெரிது—காலமோ சிறிது' தங்கள் பொன்னான பொழுதில் இரண்டு நாழிகை நேரத்தில் இப்புத்தகத்தைப் பார்த்து, உங்கள் கருத்துக்களை அடியேனுக்கு எழுதினால் அதுவே நீங்கள் இந்த எளிய தொண்டுக்கு அளிக்கும் பரிசாக எண்ணி மகிழ்வேன்.

**உற்சாகம் கொடுங்கள். உங்களுக்கு உண்மைகளைத் தருகிறோம். சக்தி கொடுங்கள். சத்தியத்தை வழங்குகிறோம். மகாகவி மரபின்வழி தொண்டாற்றுகிறோம்;**

வாழ்க பாரதம்! வாழ்க நல்லுலகம்!!

அன்புள்ள,

**எஸ். டி. சுந்தரம்.**

# உட்பொருள்

அஞ்சலி! ... ... ...
அன்னை. ... ... ...
தந்தை. ... ... ...
குரு. ... ... ...
தெய்வம். ... ... ...
நாடு. ... ... ...
ஊர். ... ... ...
உலகம். ... ... ...
மனிதன். ... ... ...
தத்துவம். ... ... ...
கவிபாடும் கலைக்கன்னி! ... ... ...
கம்பன்கண்ட குடியரசு! ... ... ...
இன்பம் எங்கே? ... ... ...
ஜீவசங்கீதம். ... ... ...
ஆருயிர் வீணை! ... ... ...
கன்னியின் காவியம்! ... ... ...
வையக ஊஞ்சல்! ... ... ...
மின்னல் விழி. ... ... ...
தமிழ்க் கிளி! ... ... ...
கலைச் செல்வம்! ... ... ...
எல்லையற்ற வல்லமை! ... ... ...
வானமுதம். ... ... ...
ஒலி உயிர்த் தெய்வம்! ... ... ...

[illegible] ... ... ...
காவேரி. ... ... ...
ஊமைக்கன்னி ! ... ... ...
தெய்வம் எங்கே ? ... ... ...
கவியின் குரல். ... ... ...
சிங்கநாதம் கேட்குது ! ... ... ...
வீரவணக்கம். ... ... ...
மரணநதி ! ... ... ...
உயர்ந்ததோ மனிதஜாதி ? ... ...
தேன் தமிழ். ... ... ...
எச்சரிக்கை ! ... ... ...
காலத்தின் எல்லையிலே ... ... ... ...
சேமநிதி. ... ... ...
சிரிக்கும் காதல் ... ... ...
காதலர் கூற்று ... ... ...
கானல். ... ... ...
இட்லி சுப்பன் ... ... ...
ஏனின்னும் எழுதுகிருன் ? ... ... ...
விநோபா ... ... ...
பட்டணம் ... ... ...
எங்கே சென்ருய் ? ... ... ...
நாதக்குளிர் நதியே ! நல்லமுதே ! ... ...
ஓய்வு. ... ... ...
தாமதமேன். ... ... ...

## அஞ்சலி

பாருக்குத் துயரம் வந்தால்
    பருவமா மழையால் தீரும்
வேருக்குத் துன்பம் வந்தால்
    வளமிகு ஊற்றால் தீரும்
நீருக்குத் தூக்கம் வந்தால்
    நீள்கடல் அலையால் தீரும்
யாருக்குத் துயர் வந்தாலும்
    நேருவின் குரலே தீர்க்கும்.

ஊருக்கு உழைத்த எங்கள்
    உத்தமன் உருவம் எங்கே?
தேருக்குத் தெய்வம் எங்கே?
    தேசத்தின் தலைவன் எங்கே?
போருக்கு முடிவுகண்ட
    புத்தனின் ஞானமெங்கே?
பூரண ராமன் காந்தி
    போற்றிய பரதன் எங்கே?

சூரியன் உள்ளமட்டும்
    சுதந்திரம் உள்ளமட்டும்
பாரினில் நாகரீகப்
    பண்புகள் வாழுமட்டும்
வாரிதி அலைகள் பாடும்
    வானிசை உள்ளமட்டும்
பாரதத் தலைவன் எங்கள்
    பண்டிதன் பேரிருக்கும்!

மானிடம் உள்ள மட்டும்
    மாருதம் வீசுமட்டும்
ஞானிகள் கண்ட நீதி
    நல்லறம் வாழுமட்டும்
கானுயிர்க் குலம்விளங்கும்
    குழந்தைகள் உள்ளமட்டும்
வானுயர் ஜோதி எங்கள்
    வானவன் பேரிருக்கும்!

கங்காநதியின் கருணைமனம்
    காவிரி அன்னையின் கவிதையுள்ளம்
மங்கா இமயம் தென்குமரி
    மன்னவன் நேருவின் புகழ்பேசும்

ஏழுகடல் எழும் அலைஇசையில்
    எண்திசை எம்மான் குரல்கேட்கும்
வாழும் வான்கதிர் வீதியெல்லாம்
    வள்ளல் நேருவின் ஒளிதெரியும்

கானம்பாடும் பறவைகளும்
    கண்போல் மின்னும் மலர்க்கூட்டம்
மோனம்கூடும் மலைச்சிகரம்
    மோகன நேருவின் முகங்காட்டும்

அண்ணல்பேசிய அறிவுரைகள்
    அமைதிகாட்டும் அமுதூட்டும்
மண்ணும் விண்ணும் மனிதகுலம்
    மாணிக்க நேருவின் மறைகேட்கும்

ஆசியவிடுதலைக் கோயிலிலே
    அணையாவிளக்கின் கோபுரமாம்
தேச சரித்திரம் உலகமெல்லாம்
    திலகஜோதியின் புகழ்பேசும்!

★

# அன்னை

பூவிரியும் புதுமணமும் பெருமழையும்
    அமுதூறும் வானதியும் வைகையாறும்
பாவிரியும் கதிர்மதியும் பழமலையும்
    பசியவயல் புதுவுலகும் புகழுலாவும்
காவிரியும் காட்சிகளும் கனகமணி
    கோபுரமும் கண்டுள்ளம் கவிதைபாட
மாவிரியும் மண்மீது மைந்தன் எனைப்பெற்று
    மகன் என் றழைத்த தாயே!

மண்ணப்பருமென்னைப் பொன்னப்பருக்கியே
    மாசிலா வாழ்வளித்தாய்
வண்ணவான்திரையிலே வளர்பிறைஒளிகாட்டி
    வயிறாரப் பாலூட்டினாய்
உண்ணாமல் ஓயாமல் ஓராண்டு தூங்காமல்
    என்னையும் ஆளாக்கினாய்
அன்னையே உன்னுயிர் அன்பிலே திவலைநான்
    ஆருயிர்ச் சோதி நீயே!



# தந்தை

கோலக்குலக் குருத்துக் கொழுந்துகளைக் காப்பாற்றும்
　　காலக்கடமையிலே களைப்புமிக வந்தாலும்
பாலன் நம்பிள்ளை படுசுட்டிப்பயலென்றே
　　பாசமழைபொழியும் ஆசைமுகில்என்தந்தை.

தோளில்சுமப்பார் தோட்டத்தில் தென்னையிளம்
　　பாளைமணியைப்போல் பரிவோடுபாலிப்பார்
வேளைக்குப்படிப்புண்டு விளையாட்டுமிகவுண்டு
　　நாளைக்கு என்றாமல் நல்லபணி செய்யென்பார்.

ஆலம்விழுதை அடிவாழைக்கன்றிதனை
　　கோலக்குமரனாய்க் கொடிமரமாய்ச் செய்தென்னை
சீலமாய் வாழ்கஎனச் சிரித்தார் நான்சிந்தித்தேன்
　　சிந்தனைக்கு முந்தியவர் சென்றுவிட்டார்
　　　　　　　　　　　　வெகுதூரம்!

காலமெல்லாம் தேடினேன் கண்ணீராற் கூப்பிட்டேன்
"கலங்காதே இருக்கின்றேன் கண்மணியே பக்கத்தில்
பாரென்றார்", நின்றான் பள்ளிக்குச் சென்றுவந்த
　　பேரன்திருவுருவில் பேசுகிறார் என்தந்தை!




## குரு

முந்தையர்வீரத்தை மந்திரசாரத்தை
முத்தமிழ் வீணையில் மீட்டிவிட்டான்
தந்தையும் தாயும் தடுத்துமே கேளாத
தேசபக்திக்கனல் தேடவைத்தான்!
சிந்தையில் சக்தியும் சத்தியமும்பெற
செல்வச்சுதந்திரம் தந்துவிட்டான்!
செந்தமிழ்ப் பாரதி சற்குருவேதுணை
சேவடியைத் தினம் போற்றுகின்றோம்.



## தெய்வம்

முன்னைப்பழம்பொருளின் முகவரியை யானறியேன்!
மூத்தபெருமறைகட்கும் முகமூடிபோடுகிறார்.
பின்னைப் பல மதமும் பெரியதலை வலியானால்
பேரன்புத் தெய்வத்தைப் பார்க்கும்விதம்
எந்தவிதம்?
என்னைப் படைத்தபொருள் ஏனின்னும் வரவில்லை
என்றெல்லாம் எண்ணியே ஏங்கினேன் அந்நாளில்
தன்னைப்பற்றிவிட்டத் தனையர்க்குத் தெய்வத்தின்
தன்மையறிவிக்கத் தான்வந்த மாசக்தி!



# நாடு

எங்கள்நாடு நல்லநாடு
    எல்லைகோடு இமயமேடு
திங்கள்கதிர் திகழுநாடு
    தெய்வமெங்கள் குமரிவீடு
மங்களக் கலைகள்நாடு
    மறைவளங் கொழித்தகாடு
பங்கயக்குளங்களோடு
    பாடுமின்ப ஜீவநாடு!

பொங்குகின்ற புதியகொள்கை
    போற்றுகின்ற புனிதநாடு
துங்கமான தொழில்கள்கோடி
    தொடருகின்ற தீரநாடு
சிங்கமான மறவரோடு
    சீர்மிகுத்த ஏர்கலப்பை
தங்கமான தாயின்நாடு
    தருமஜோதி என்றுபாடு!



## ஊர்

பாட்டமுத ஓடைகளும் பாலூறும் அருவிகளும்
ஊற்றெடுத்து ஓடிவரும் ஊருக்கு மாலையிடும்!
ஆற்றுத்துறையருகே ஆழமடுப்பள்ளங்கள்!
மாட்டுமந் தைமேயும் மாங்காட்டுப் புல்மேடை!

தாழ்ந்தபழத் தோப்பில் தாவுமணிக் குரங்குகளைச்
சூழ்ந்துவரும் சுற்றங்கள் சம்பந்தம் பேசிவிட்டுத்
தாழும் புதர்வழியே தாவிப் பறந்தாங்கே
வாழைப் பழந்தேங்காய் வரிசைச்சீர்கொண்டுவரும்.

தோப்பெல்லாம் வீடுகட்டும் தூக்கணாங் குருவிகளும்
சிப்புச் சிறகுடனே சிங்காரக் கொக்குகளும்
கூப்பிடவே ஓடிவரும் காடைகளும் கௌதாரி!
மாப்புள் கருடனுடன் மைனாவும் விளையாடும்.

கோயில்குளச் சாவடியில் குலுங்குமாம் நந்தவனம்
வாயில் நுழையுமுன்பே வண்டுகளோ வரவேற்கும்
சாயல் நீலமயில் சாய்ந்தாடும் அரசமரம்
ஆயுள் வலிமைதரும் ஆற்றூராம் எம்மூரில்



வயலில் வேலைசெய்யும் வேளாண் பெருமக்கள்
செயலில் வல்லவராம் சொல்லிலுமே நல்லவராம்
அயலூரின் வியாபாரி ஆத்தூரில் வந்ததுமே
நயமாக விற்றிடுவார் நல்லபெயர் வாங்கிடுவார்!

இந்தபெரு நிலையெல்லாம் இருந்ததுவாம் ஒருகாலம்
சொந்தஊர் என்றதொரு சொல்லுக்கு அணிகலமாம்
அந்தஊர் ஆற்றூரின் அழகுக்கு இணையாக
எந்தஊர் உண்டென்று ஏத்தியதும் ஒருகாலம்!

பிறந்த ஊர்பெற்ற பெருமைகளைக் கேட்பதுவே
சிறந்த செவிக்குரிய சிறப்பென்றுச் சொல்வார்கள்
பறந்துவந்து சென்னைக்குப் பல்லாண்டு ஆனதுவால்
அறிந்தவரே சொல்லுங்கள் ஆற்றூர் நலந்தானே!

ஊருக்கு எதுபெருமை உங்களுக்கா தெரியாது!
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் என்பார்கள்
நீரென்ன செய்கின்றீர் நீரமுத ஊற்றான
ஆறுகளைச் சாக்கடையாய் ஆக்கிவிட்டீர் நல்லவரே!

ஆற்றைப்பரிசாக ஆண்டவனார் தந்தாலும்
ஊற்றை அடைத்ததுவோ உங்களது மந்திரமோ?
காற்றைக் கனலுயிரைக் கடவுளது நற்பரிசை
நாற்றப்படுத்துவதோ நம்மவரின் கைவரிசை!



ஆற்றழகு போனபின்பு ஆற்றூர் பெயரேதற்கு?
சூட்டுகின்ற மலரில்லா சுமங்கலிக்கு என்னபெயர்?
ஆற்றூரை ஆட்டூர்என் றுங்கிலத்தான் சொன்னதை நீர்
ஏற்றுவிட்டீர் போலும் ஏளனமா செய்கின்றீர்!

காட்டை அழித்திர்கள் கடுந்தும்பல் மலைமேகம்
ஓட்டம் பிடித்தமுகில் உமையஞ்சி ஒதுங்கியதால்
காற்றுப் பருவமழை கனவாகிப் போனதனால்
கீற்றுத் தென்னையெலாம் கிழடாகிப் போனதுவோ?

மோட்டார் மின்சாரம் மெசின்பம்பு தான்வைத்தீர்!
கூட்டாகப் பயிராக்கிக் கொள்ளுகிறீர் முப்போகம்
கேட்டால் பணமாக்கல் கெடுதலோ என்பீர்கள்!
வீட்டுக்கோ குடிதண்ணீர் விலைபோட்டு வாங்கிடுவீர்!

எப்போதும் தித்திக்கும் எங்களூர் தண்ணீரை
இப்போது ஆவலுடன் அருந்தினேன் அப்பப்பா!
உப்புக்கஷாயமாய் உயிரெல்லாம் ஆட்டியது-
தப்பன்றோ இப்படிநீர் தண்ணீரைச் கொல்லுவது?

கங்கைதனைக் கெடுத்தால் காசிக்குப் புகழ் உண்டா?
மங்கைதனைக் கெடுத்த மாந்தர்க்கேன் மரியாதை?
உங்களுக்கு உயிரூட்ட ஓடிவந்த ஊராற்றை
செங்கல்லின் சூளையெனச் சுட்டுவிட்டீர் அய்யய்யோ!



பேராசை கொண்டதனால் பெரியமலைக் காடுகளை
பூராவும் தீவைத்துப் பூத்த புதுக் கரியாக்கி
யாருக்கோ சேர்க்கின்றீர் ஆயிரமாம் பணமூட்டை
தீராத தாகத்தைத் தீர்த்திடுமா கோடிபணம்!

சீரான நதிஓடி வருகின்ற வழியில்ஒரு
பாறாங்கல் வீழ்ந்துப் பாதை தடுக்குதென்பீர்
கூறாதீர் காரணங்கள் கொடுமலையே வந்தாலும்
நீறாகச் செய்திடவே நிற்குமாம் யந்திரங்கள்!

நீர்கூறும் காரணத்தை நிசமென்று தான்நம்ப
யாரீங்கு உள்ளார்கள் ஏனிந்தச் சிறு கதைகள்?
தேர்போன்ற மலைச்சாரல் தாவரத்துப் பச்சைக்குக்
கூர்நாக்குத் தீவைத்தீர் குளிர்வான மழைஎரிய!

தேமலையாம் வேங்கடத்தில் தலைமொட்டையாவது
போல்
மாமலையின் வனமெல்லாம் படுமொட்டை ஆக்கியபின்
பூமாலைப் பெரியோரை புதியமரம் நடச்சொல்லி
ஏமாற்றினால்ஆற்றில் ஊற்றுமா காற்றுமழை?



## உலகம்

உலகே உலகே நலந்தானே?
உருண்டை வடிவம் சுகந்தானே?
நிலமே நீண்ட நீர்கடலே
நெடுமலை மழையே நலந்தானே!
ஒளியே உயிரே ஒலிவானே
உறவுகள் எல்லாம் நேர்தானே!
நலமா என்றே கேட்கின்றேன்
நான்தான் அணுவின் குண்டுமகன்!

ஒழுங்காய் மானிடர் வாழ்ந்தாலே
உன்னைக் காப்பேன் உயிர்போலே
ஒழுங்கே தவறிப் போனாலோ
ஓகோ ஓயாப் பேயாவேன்!
விழுங்கும் சண்டைப் பசிவந்தால்
உலகம் என்சிறு ஆகாரம்
மழுங்கும் மூளை மாந்தரிடம்
மறக்காமல் இதைச் சொல்லிவிடு!



துலங்கும் ஆயிரம் விஞ்ஞானம்
தூள்தூளாகும் கணநேரம்
கலங்கும் உலகில் கலையழியும்
காரிருள் அண்டம் நிலைகுலையும்!
விளங்கும் மானிடப் பூண்டிங்கே
வேண்டும் என்றால் அறிவுடனே
களங்கம் இல்லா அன்புடனே
கலந்து வாழ்ந்தால் கவலையில்லை.

கலகம் எங்கே வந்தாலும்
காட்டுத் தீதான் கடலெரியும்?
உலகப் பந்தொரு சிறுகவளம்
ஒழியா தென்பசி பூகம்பம்!
கலைந்தால் என்மனம் கடையூழிக்
காலக் கனலைக் கக்கியெழும்!
கலையார் கருணை மிகுதியினால்
கடிதம் இதையும் எழுதுகிறேன்.



## மனிதன்

தூங்கும் குழந்தை விழிஇமையில்
தோயும் சாந்தப் பேரழகே!

ஏங்கும் மனிதன் பார்வையிலே
ஏனோ உன்னைக் காண்கிலனே!

தேங்கும் ஏரியின் தெண்ணீரில்
தெரியும் இனிமையின் திருவருளை

தேம்பும் மனிதன் உணராமல்
தெரியாதெங்கோ தேடுகிறான்!

ஆற்றங்கரையின் நிழலினிலே
ஆயன் ஊதும் குழலினிலே

ஊற்றும் அமுத மழையெல்லாம்
ஓடும் மனிதா உனக்கன்றோ?

காற்றின் அலையில் கழனிகளில்
கார்முகில் தூவும் சாரலிலும்

பாட்டின் கதியில் பரவெளியில்
பரவும் அழகைப் பாராயோ!



சோர்ந்தஉயிரில் சுற்றிஎழும்
சோகம்தீர்க்க மாட்டாயா?
ஓய்ந்த மனிதா ஒருநாளும்
உண்மைகாண மாட்டாயா!

பேயாயலையும் மானிடமே
பேசிச்சாகும் யந்திரமே!
தாயாம் அன்பின் சாந்தியவள்
தருமத்தின் ஒளி காணாயோ!

உன்னுள் சத்தியம் இல்லாமல்
உலகின் சமரசம் பேசுகிறாய்
என்னே போலிவாழ்க்கையடா
ஏனோ இப்படி ஏங்குகிறாய்!

பேசாமிருகம் நல்லதடா
பசித்தால் ஏதோ கொல்லுதடா!
பேசும் மனிதன் நல்லவனா
பார்வையினாலே கொல்லுகிறான்!

பாவம் என்ற சொல்லுக்கே
பகுத்தறிவில்பொருள் இல்லையடா?
நாவன்மை பொய்வஞ்சகமே
நண்பா நம்மை ஆளுதடா!



## நன்றிமாய


மெத்தப் படித்திட்ட மேதைகளைக்கண்டு
  மெய்ஞான சாத்திரங் கேட்கவந்தேன்.
சித்தசுத்தியுடன் செய்கையுடன் ஒரு
  சத்தியவானையும் தேடி வந்தேன்.

தத்துவ சாகரத் தோணிப் பட்டம்பெற்ற
  திருவாளர் பெரியாரைக் கண்டுகொண்டேன்
வித்தை தெரிந்தவர் வேதம் புரிந்தவர்
  வாதக்கடற்கரை கண்டவராம்?

தித்திக்கவே பேசும் திறமிகுந்தவர்
  தேன்மழையானவர் தீந்தமிழ்நாவலர்:
புத்தம் புதுவெள்ளம் போலவர் பேசிஞல்
  புத்தகமாயிரம் வந்துவிழும்!

"இத்தரை மாந்தரே! ஈசனைக்கண்டிட
  ஈகையொன்றேவழி என்றறிவீர்"
என்றவர் பேசிய ஏழுநாளில் மக்கள்
  எட்டு லட்சம்நிதி கட்டித்தந்தார்!

தர்மத்துரட்சகர் தர்க்கத்துராட்சஸர்
  தமிழில் அகத்தியன் பட்டந்தந்தார்
உருவத்திலும்பெரு உத்தமர்என்றொரு
  ஊக்கத்தையும்கூடத் தந்துவிட்டார்!



வட்டி முதலாளி வியாபாரி அதிகாரி
வேடிக்கை மேடைத் தலைவர்களும்
பட்டுப் பீதாம்பரம் போட்டுப் போட்டு அந்தப்
பேசும் நடிகரைப் பூசையிட்டார்!

பேச்சு முடிந்ததும் போதகர் ஊருக்குப்
பொன்மூட்டையோடவர் போகையிலே
மூச்சுத் திணறியே முன்னாள் சோதரன்
முனியாண்டி ஓரத்தில் வந்து நின்றான்

பேச்சுவரவில்லைப் பொங்கிய சோகத்தில்
போதகரின்முகம் பார்த்துநின்றான்
காதுமடைக்குது கண்கள் துடிக்குது
காணவந்தேன் நெஞ்சில் காசமய்யா

தருமத்தை நீபேசும் சமயத்திலேவந்தேன்
திண்ணைப் பள்ளிக்கூடத் தோழனய்யா
தயவு செய்யவேணும் தாயினைக்காப்பாற்ற
தாரணி மீதுயிர் வாழவேணும்

தாக்கும் பிணிதீர டாக்டர் உதவிக்கு
தோழனே நீவழி செய்யவேண்டும்"
என்றவன் கெஞ்சிய ஏக்கக்குமுறலில்
குன்றுருகும் உள்ளம் நின்றுருகும்

எங்கள்மெய் ஞானியார் ஏழைபங்காளனார்
ஏதும் செயலின்றி ஏகிவிட்டார்
சாய்ந்தமரமவன் ஓய்ந்திடுமுன்பாக
பாய்ந்து மருத்துவம் பார்க்க வைத்தேன்.




தத்துவ மேதைக்கு மெத்த உதவியே
தத்தளித்த ஏழை செத்துவிட்டான்!
பக்தியின்போதகர் புத்தியில்வல்லவர்
பத்துப் பங்களாவை வாங்கிவிட்டார்!

இத்தவ நாட்டினில் இன்னும் இருக்குது
ஈசன் திருப்பெயர் பூசையெல்லாம்!
கத்தைப் பணநோட்டைக் கையிலேநீட்டினால்
கடையிலே ஞானத்தை வாங்கிடலாம்!

இத்திரு உண்மையை இங்கு நாமுங்கண்டு
இன்ப ஞானக்கடை வைத்திடலாம்
எத்தகை வியாபாரம் யாரிங்குசெய்யவும்
ஏராளமாயுண்டு இன்பசுதந்திரம்!

எத்தனை எத்தனை ஞானபரம்பரை
இத்தரை வாழ்வினில் என்ன கண்டோம்!
பக்தி மறந்தவர் பேசிச்சிறந்தவர்
பாசாங்குக்காரரை வாழவைத்தோம்!

புத்தரும் வள்ளுவர் சித்தர் ஏசுமுதல்
சத்தியகாந்தியும் வந்துதித்தார்
அத்தனை பேரையும் தின்று ஏப்பம்விட்டுத்
தத்துவ சாத்திரம் வாழுதய்யா!



## கவி பாடும் கலைக்கன்னி!

*உலக மெனும் ஓவியமே!*
*உறைந்து விட்ட தீப்பந்தே!*
*கலக மிலா வான் சுழலும்*
*காந்த மணி மண்டலமே!*
*கலி கண்ட நாடகமே*
*கயிறில்லாப் பம்பரமே!*
*கலைக் கன்னி உனையெண்ணிக்*
*கவி பாடி ஆடுகிறாள்!*

*ஆடிய தோர் அதிகார*
*ஆதிக்கப் போர் வெறியர்*
*பேடியரின் யுத்தத்தால்*
*பெருந்துயரப் புண்பட்டு*
*வாடி விட்ட உன் வாழ்வே*
*வற்றி விட்ட உள மகிழ*
*நாடி வந்து நலஞ் சேர்க்கும் .*
*நற்கலையாள் பாடட்டும்!*



3. பாட்கியே எனைநாடிப்
பைங்கவிதை பாடென்றாள்
கோடிப்பண் இசைக்கின்ற
கொல்லி மலைச் சாரலிலே
கூடு விட்டுப் பறவையெலாம்
குறிஞ்சி மலர்த் தேனுண்டு
ஆடுகின்ற ஆட்டத்தை
அங்காந்து காணுகையில்!

4. ஆடலரங் கேறிய பின்
அவலத்துக் கேது இடம்?
வேடங்கள் போடுவதும்
வேடிக்கை காட்டுவதும்
நாடகத்துக் காட்சிகளும்
நவரசமாம் சூழ்ச்சிகளும்
ஓடுகின்ற விதி யோடை
ஒடுங்கும் அலை ஏடுகளாம்!



5. ஓடுகின்ற ஓடையிலே
ஒரு சீட்டுக் கவியெழுத
தேடுகிறேன் ஏடுகளை
தெரியாத பொருளுக்கு
வாடுகிறேன் வார்த்தைக்கு
வாயில்லாப் பறவை யெலாம்
ஊடுவதும் கூடுவதும்
ஓங்கி யெழும் கவியன்றோ?

6. ஓங்கு பெரு மாமலையை
உயர் சாரல் அருவிகளை
தாங்கி வரும் தண்ணமுதை
தாவரத்துக் காடுகளை
தேங்குவளை வள மடுவை
தேங்காத தென்றலதை
வாங்கி விற்கும் வியாபாரம்
வண் கவிதை ஆயிடுமா?



7. வியாபாரி கவி யானால்
விவசாயி என்னாவான்?
சாயாத கதிர்த் தலையை
சாய்வித்துச் சாரத்தால்
ஓயாது உயிரூட்டும்
உத்தமனின் உழைப்பெல்லாம்
காயாத கானகத்தில்
களியூட்டும் கவிதை மொழி!

8. மொழி மதுர மேதறியான்
மரபறியான் முது புலமை
வழி யறியான் வீண்வாத
வம்பறியான் வாய்பேசும்
பழியேதும் அவனறியான்
பாருயிரின் பசியறிவான்
அழியாத அமுது படி
அளந்திடுவான் ஆதிகவி!



9. அதி நுட்ப நூல் கற்று
அவையடக்கி அன்பரையும்
மிதிக்கின்ற மத மறியான்
மனமென்ற யாழ் மீட்டும்
சுதி யொன்று தானறிவான்
தூரத்தே ஆட்டிடையன்
விதி யூதும் குழலோசை
உயிரறிவான் மற்றறியான்!

10. மாற்றறியாப் பொன்மயமாம்
மனமென்னும் புது மேடை
காற்றெழிலி யோடு எழும்
கன்னியிளங் கீத மழை
ஊற் றெழிலி! இவ்வுலகின்
உள் காந்தல் நோய் தீர
சாற்றமுதத் தேன் கவிதை
சற்றே நீ பாடாயோ?



11. சங்கீதம் பாடுகையில்
சந்தேகம் வரலாமோ?
சங்கோசம் ஏனடியோ
சதி ராடும் இளவரசி!
மங்கை யெழில் மேனியிலே
மின்னுமணி மேகலை போல்
தங்க மலர்த் தாளை சையும்
தாளத்தில் பாடுக நீ!

12. தாளத்தின் லய வீச்சில்
தாவுகிற வேகத்தில்
காலத்துப் பரிமாணக்
கணக் கெல்லாம் ஏனடியோ?
கோலத்துக் கோதை யெழில்
குலவுகிற கொஞ்சு கலை
ஜாலத்துக் கண்வீசும்
ஜாடை கண்டு பாடாயோ?



13. பாடாத கவியிங்கு
பாடி விட்டேன் ஏனின்னும்
ஆடாத ஆட்டங்கள்
ஆடியடி ஓய்ந்திட்டேன்
தேடாத திரவியமும்
தேடி விட்டேன் எனக் கூறி
ஓடாதே உயிரே நீ
ஒடுங்காதே கண்ணாட்டி!

14. கண்ணான கண்ணல்ல
காவியத்துப் பெண்ணல்ல!
எண்ணாத எண்ணங்கள்
எண்ணி யெண்ணி ஏங்குகிற
மண்ணாதி அண்டங்கள்
மலர்க் கவிதை மங்காயுன்
தண் தாமரை யடியில்
தண்டனிட்டுக் கோருதடி!



15. கோரிக்கை உண்மையடி
கோபமேன் செங்குமரி!
ஆருக்குந் தெரியாத
அழகிருந்து யாது பயன்?
பாருக்குத் தீமைசெயும்
பாதகர்க்குத் தீ மூட்டி
ஊருக்கு உணர்வூட்ட
ஊழி நடம் ஆடடியோ!

16. ஊழூழி கால மெலாம்
உன்றுட்ட மேடையிலே
ஏழிசையில் தாழிசையில்
ஏட விழும் பூ வைத்து
வாழையடி வாழையென
வாடிக்கைப் பூசையிடும்
வாழ்க்கை யெனும் பூசாரி
வேண்டு கிறேன் கவி பாடு.



17\. கவிக் கோமான் கம்பனையும்
கண்ணகி காற் சிலம் பொலியை
சுவைக் கோபு ரந்தன்னில்
சேர்த்து விட்ட இளங்கோவை
புவிக் கோயில் இமயத்துப்
பொது வேத வள்ளுவனை
தவக் கோமான் பாரதியைத்
தந்த தமிழ்த் தேன் பருகு!

18\. தேன் பருகத் தாவி வரும்
தேன் சிட்டு உன்னுள்ளம்!
வான் பரவும் ஒளி தின்னும்
ஓடிவரும் உன் விழிகள்!
கான் வளரும் கோடி மலர்க்
கனி யமுதம் உன் னதரம்!
ஆன் சுவையின் பால முதம்
அச் சுவையில் பாடாயோ!



19. சுவை மட்டும் போதாது
சுக மட்டும் போதாது
தவங் கெட்டுப் போகாமல்
தரங் கெட்டுத் தாழாமல்
செவி கெட்டச் சீமான்கள்
சூழ்ச்சிகளைச் சுட்டெரிக்கும்
கவி கொட்டிக் கலை யுலகம்
களை கட்டப் பாடாயோ?

20. களைத் திட்ட கவலைக்குக்
காலை யிளங் காற்றே நீ
திளைக்கின்ற இன்பத்தில்
தீங் கவிதை தாராயோ?
வளைக்கும் சொல் இல்லாமல்
வானமுதத் தேனுண்டு
களிக்கின்ற வெண் குயிலே
கருத் துருகப் பாடாயோ?



சிரத்தோடு ஜீவனையும்
செல்வத்தைப் பலிதந்த
உருத்தெழுந்த வீரர்களின்
உயிரோங்கப் பாடாயோ!
சிரத்தையுடன் சிந்தித்து
செந்தமிழின் சங்கத்தில்
உரத்த குரலெடுத்து
உயிர்உருகப் பாடுக நீ.

21. உருகாத கல்லுக்கு
உண்டு மணி வாசகமும்
பருகாத மதியுண்டா
பாடாத மனமுண்டா
திருவாய் மொழியின்பத்
தேனூற்று வெள்ளத்தில்
ஒரு வாயும் போதாதா
உலகு பசி தீராதா?



22. சுவை ஞான இசைக் கடலில்
சொக்கிவிழும் சிற்றூறும்
சுவையாழி ஆவதுபோல்
சுகமான இசைபாடி
சுவையாக்கி இவ்வுலகை
சொக்கழகுத் தீ வாக்கும்
சுவையமுத சாகரமே
சுந்தரியே நீ வாழ்க!



## கம்பன் கண்ட குடியரசு !

உள்ளத்து வீதியிலே
    உலவுகின்ற கவியரசன்
பள்ளத்துச் சென்னையிலே
    பவனிவர வேண்டுமென
தெள்ளுதமிழ்க் கம்பருக்குத்
    திருவிழா நடத்துகிற
நல்லபணி செய்துவரும்
    நாவலரும் விரும்புகிறார்!

பாவம் கவியரசன்
    பிழையேதும் செய்யவில்லை
பாவலனைக் கொண்டுவந்து
    பட்டணத்து வீதியிலே
பட்டங்கள் பலதந்து
    பொன்னாடை போர்த்திவிட்டால்
கிட்டிடுமா வைகுண்டம்
    கவியுள்ளம் ஓய்ந்திடுமா?



கவிமன்னன் சென்னையிலே
    காலெடுத்து வைத்ததுவும்
அவன் கண்ட இக்கால
    அரசியலின் காட்சிகளை
சுவையான கவியாக்கி
    சொல்லென்று ஆணையிட்டீர்
அவையின் முன்னின்று
    அடியேனும் சிலசொல்வேன்.

உலகின் வியப்பான
    உயர்மலையின் ஒளிசேரும்
தலையின் மணிமுடியின்
    தவக்கதிரைத் தான்கண்டான்
தொலைவின் சிகரத்தைத்
    தொட்டுவிட்டான்; தொல்ஞானக்
கலையின் ஆழத்தைக்
    கண்டகவிக் கருமுத்து!

கவியரசன் பவனியிலே
    கண்டதென்ன சொல்லென்றீர்
கவிகண்ட காட்சிகளைக்
    கணக்காகச் சொல்லிதமிழ்க்
கவிகட்ட நான்கட்டுத்
    தறியல்ல; மூங்கிலிலே
சுவைத்திட்ட பனிநீரும்
    பண்துளியும் நானல்ல!

அறிவின் கலைமன்னன்
அமரமகா கவியண்ணன்
செறிவுள்ள ஞானத்தின்
சீர்மிக்க எண்ணத்தின்
திறமுள்ள அரசியலை
தெய்வீக ராஜ்யத்தை
அறமுள்ள நாள்வரையும்
அசையாமல் ஆக்கிவிட்டான்!

தத்துகின்ற தவளைமனம்
தாவுகின்ற குரங்காகி
சுத்தியுளம் சோர்கின்ற
சோகத்தின் வேளையிலே
புத்தியெலாம் வசமாக்கிப்
போதை கொள்ள வைத்துப்பின்
சுத்த மெய்ஞானத்
தெளிவுதரும் ஞானியவன்!

தத்துவத்தின் ஆசிரியன்
தருமத்தின் செங்கதிரோன்
மெத்தச்சுடர் வீசும்
மேலான மாநகரில்
சக்திமிகு செங்கோலின்
சாந்திமிகு அரசியலில்
சத்தியத்தின் சாரமெலாம்
ஜெயராம ராஜ்ஜியமாம்!

சுவைகோடி சொற்கோடி
    சுகங்கோடி மந்திரமாம்
கவிகோடி கங்கைகளின்
    சங்கமத்தின் சாகரத்தில்
புவிதேடும் புலமையெலாம்
    பேரலையின் சிறுதிவலை
பவக்கடலைத் தானளக்கப்
    படியெங்கே புலவீர்காள்!

அறிவாற்றல் தானுண்டோ
    அன்பாற்றுக் குகனைப்போல்
அறவோர் அருளென்னும்
    ஆர்வத் துடுப்பாலே
பெரியோர் உரையென்னும்
    படகின் துணைகொண்டு
அரிதான கவிக்கங்கை
    ஆற்றில் அரசியலாம்

துறைசேர முயற்சிப்போம்
    தூயகவி துணைவருக
பிறைசேர்ந்த வானத்தில்
    மின்னுகிற தாரகையை
விரல்விட்டு எண்ணுவதோ
    விளக்கங்கள் செய்குவதோ?
நிறைசேர்ந்த ராமகதை
    நீதிமறை எல்லையிலே

அவன் கண்ட அயோத்தி
யுத்தமற்ற அன்புபுரி
கவிகண்ட கோசலத்தில்
காலமழை வருவித்த
தவஞான உத்தமிகள்
சக்திகளின் ரூபமெனில்
சிவமென்று வீரர்களை
சொல்லித்தான் தெரியணுமோ?

ஜெயங்கொண்ட அந்நாட்டில்
சனிபகவான் தொல்லையில்லை
வயங்கொண்ட வளநகரில்
வஞ்சகரின் நெஞ்சமில்லை
நயங்கொண்ட நன்மக்கள்
நாவொன்றே நீதிசபை
பயமென்ற பேச்சறியா
பொன்னாடு அந்நாட்டில்.

தேர்ந்தவர்கள் ஆண்டதனால்
தேர்தல் எனும் தொல்லையில்லை
சேர்ந்தவர்கள் சீலத்தால்
செறுபகையின் புகையில்லை
சார்ந்த்ஜன நாயகனாய்
ஜகம்புகழும் தயரதனைக்
கூர்ந்தமதிக் குவலயமே
கோனென்று கொண்டாடும்!

இராமன் வருமுன்பே
இராம ராஜ்ஜியங் கண்ட
கோமான் துயரதனின்
கொள்கை தவப்பயனே
இராமன் திருவுருவாய்
இரவிகுலம் விளங்கியது
சீமான் சிற்றடிமை
சிறுமை ஆங்கில்லை.

வம்பே பேசுகிற
வாய்ச்சொல் வீரர்களின்
துன்பப் போராட்டம்
துயரம் ஆங்கில்லை
சம்பளம் வாங்காத
சேவகர் ஆங்குண்டு
கிம்பளம் வாங்குகிற
கிங்கரர் ஆங்கில்லை.

உப்புக்கும் கூழுக்கும்
உண்மையை விற்பதில்லை
எப்போதும் நல்லெண்ணம்
எங்குமே நற்சங்கம்
சப்பாணிச் சோணிகளை
ஜெயவீர பீமனென
ஒப்பாரிக் கவிபாடும்
அப்பாவிக் கூட்டமில்லை.

துப்பேதும் நிகழாத
    தேசத்தில் எல்லோரும்
அப்பழுக் கில்லாத
    அறிஞராம் பெருமக்கள்
செப்பனிட்ட சமுதாயம்
    சீராம ராஜ்யத்தில்
சிறப்பத்துக் குழந்தைகள்
    சீரழகு சிந்துவராம்!

கம்பன் கண்ட பெரும்
    கவிஞர் ஆட்சியிலே
கடையின் வியாபாரி
    கரும்பணம் கேட்பதில்லை
அரிசியெனச் சொன்னால்
    அதிலே கல்லில்லை!
பருப்பில் பாதிமணல்
    பதரும் ஆங்கில்லை.

என்னே வியப்பதுகாண்
    எதிலும் கலப்பில்லை!
இன்னும் வியப்பதுதான்
    எண்பது கட்சியில்லை-
எண்ணில் மேடைவிளக்
    கெண்ணெய்ப் பேச்சில்லை.
பண்ணின் பாவலர்போல்
    பிள்ளைகள் பேசுவராம்

சாத்திரமும் சதுர்மறையும்
சகலமகா வித்தைகளும்
சாற்றவல்ல வேதியரின்
சோற்றுக் கடையில்லை-
கூற்றுவனே வந்தாலும்
குடறுக்கும் சாப்பாட்டைப்
போட்டவனைக் கொல்லுகின்ற
பூசுரர்கள் ஆங்கில்லை.

நாட்டில் நல்லவரே
நாயகர் ஆனதனல்
ஏட்டுச் சட்டமில்லை
எரிக்கும் திட்டமில்லை,
செயலே சட்டமதாய்
சிறந்தால் ஆட்சியிலே
செயலை எரிப்பது யார்?
சிந்தையை எரிப்பார் யார்?

அங்கும் படையுண்டு
ஐந்தாம் படையல்ல
ஆன்மையின் அடிப்படையில்
ஆத்மிகப் படையுண்டு!
மங்கா மறவர்களின்
மானப் படைவலிமை
கேட்டதும் எதிரிகளின்
குடியின் குலையதிரும்!

கேட்டதும் எதிரிகளே
காலடி வீழ்வதனுல்
கொலைமிகு போரில்லை
கோட்டை விழவில்லை
கொல்லாச் சைனியமாய்க்
கூடிய வீரர்குலம்
எல்லாம் கலைஞர்களாய்
இயங்கினர் கவிஞர்களாய்!

தயரதன் ஆட்சிமிக
தெளிவாய் நடந்துயர
அரசன் அவனுடைய
அமைச்சர் காரணமாம்
அறிவின் ஜோதிமலை
அறவோன் மாமுனிவன்
அருளின் பேருருவாய்
அமர்ந்தான் வசிட்டனெனும்

வானவன் யோசனையால்
வலிமை அரசர்க்காம்
மோனத் தவமுனிவன்
முதறி வுண்மையிலே
ஞானத் திருவெல்லாம்
நாட்டின் திறமெல்லாம்
வானச் சுடரெனவே
வாழ்ந்தது மங்களமாய்.

# இன்பம் எங்கே?

இன்பம் எங்கே இன்பம் எங்கே—என
ஏங்காதே துன்பத்திலே
அன்பில் இன்பம் உயர் பண்பில் இன்பம்
ஆசை தியாகத்திலேதான்
அழியாத இன்பம் காண்பாய் ... (இன்பம்)

மாசறியாத மங்கையைப் போல்
பாசக்குயில் கூவும் சோலையிலே—
நேசம் விளங்கிடும் நெஞ்சினிலேஎழும்
ஓசையெலாம் அன்பின் இன்பம் இன்பம்
(இன்பம்)

மாமழையும் மாருதமும்
மாமலைச்சாரலில் சேர்வதுபோல்
ஆணும் பெண்ணும் சேர்ந்திசைக்கும்
ஆனந்த மோகன கீதத்திலே
தோன்றி எழும் ஜீவஸ்வரம்அதில்
துள்ளிஎழும் அன்பின் ஆத்மலயம் (இன்பம்)

வேய்ங்குழலின் விண்ணிசையில்
வீணைதரும் சுகநாதந் தன்னில்
பாய்ந்துவரும் பேரின்ப வெள்ளம்
தோய்ந்திடும் தேன்சுவை இன்பம் இன்பம்
(இன்பம்)

# ஜீவசங்கீதம்

சரசமோகன சங்கீதாமிர்த
சாரலில் மாங்குயில் கூவுது பார் (சரச)

சந்தையிலேவிற்கும் சரக்கல்லகீதம்
சிந்தையிலே எழும் ஜீவ லயம்
சுந்தரவான் கவி சோலையிலே எழும்
சுவைத் தேன்சுகமே சங்கீதம். (சரச)

மந்தை மேகங்கள் கூடி முழங்கும்
விந்தையாய் மழை வாரி வழங்கும்
அந்தமாமழையால்வரும் ஆருயிர்
சந்தமே உயர் ஜீவசங்கீதம் (சரச)

காமராஜ் நினைவு இல்லம்
சென்னை-600017
நாள் .....................
(செய்தி-மக்கள் தொடர்புத்) துறை

## ஆருயிர் வீணை !

இமயமலைச் சாரலிலே
இசைபாடும் கங்கையென

இதயமதில் அன்பெழுந்து
இன்பநிலை காட்டுதடி... (இமய)

பொதியமலைத் தென்றலிலே
பொங்கி எழும் அலையெனவே
புனித மனப் பிரேமையிலே
பொழியுதடி ஜீவசுகம்... (இமய)

கமலமுக வாணியின்கை
கானரச வீணையென
அமுதமய அன்பெழுந்து
ஆருயிரை மீட்டுதடி... (இமய)

## கன்னியின் காவியம்!

அன்பொளிவீசும் உயிர்வழிந்தாடும்
விழியில்வான் கண்டேன்—அவள்
தண்ணிதழ் ஓசை இசையினில் வாணியின்
வீணையை நான் கேட்டேன்—பசும்
பொன்னுடல் வாரிவிசிறிய ஜோதியில்
வாட்டிய குளிர் உணர்ந்தேன்—
பெண்ணவள் அருகே புன்னகையொடுவர
புத்தரையே தொழுதேன்—தன்னை
அந்நியம் என்று எண்ணவே இல்லை
என்னுயிர் உறவானுள்—எழில்
சின்னக் கரங்களில், செம்மலர் விரல்களில்
சிந்திய அழகமுதால்—நல்ல
எண்ணமெனும் பல வண்ணங்குழைத்தே
தன்மொழித் தேன்சுவையால்—நிதம்
என்மன ஏட்டினில் எழுதிய காவியம்
எண்ணில் அடங்காவே—சுவைக்
கண்ணெளி காட்டிய, கன்னியின் காவியம்
காலவிண்ணேவியமே?

## வையக ஊஞ்சல்!

சூரிய சந்திர தாரகை யாவும்நம்
திருமண மண்டப தீபங்களாம்.
வானகமே நம் மாளிகையாம்—இன்ப
வையக ஊஞ்சலில் ஆடிடுவோம்!
ஊர்வலமாக நாம் வரும் போது—இவ்
வனமே வாத்தியம் மீட்டாதோ?
மாருத ஓசை மெல்லிசை பாடும்,
மாமழை பன்னீர் தூவிடுமே.
தேன் மலர்த் தேவதை தென்றல் எனும் தட்டில்
சீர்கொண்டு மோகனம் பாடிடுமே!
தாவி எழும் புயல் வேகத்திலே—அது
தாழ்ந்துவிழும் மலைமோகத்திலே—நம்
ஆவி எழும் அன்பின் காந்தியிலே—அது
ஆழ்ந்துயரும் இன்ப சாந்தியிலே!

## மின்னல் விழி

மின்னல் விழிபாயவே—மண்மேல்
மாந்தரெல்லாம் அவள்
பொன்னடி வீழ்வார் (மின்னல்)

மங்கை ஒளிநெருப்பில்
மாதவயோகியரும்
மங்குவார் முடிவினில்
மயங்கி மடிந்திடுவார் (மின்னல்)

கள்ளை வெல்லும் அமுத
கோவை இதழ் திறந்து
கன்னல் சொல்லைப் புகல
கூவும் குயில் அழியும். (மின்னல்)

## தமிழ்க்கிளி !

அழகோடையில் நீந்தும்—இள
அன்னம் உனதெண்ணம்
எழில் தோய்ந்திடும் கலைமாமயில்
வண்ணம் உடைவண்ணம்.

சுழல் மேவிடும் பார்வை—அதில்
எழும் போதையின் கூர்மை—சுவை
பழம் ஊறியதேனோ—சுடர்
தழல் வாரிடும்வானோ?

மழை சூழ்ந்திடும் மாலை—குளிர்
தழை தாழ்ந்திடும் சோலை—அதில்
விழை வாய்க்கனி தேடி—தமிழ்
மொழி பேசிடும் கிளியே!

## கலைச்செல்வம்!

கொஞ்சும் மொழியினில் குளிர்தீங்கவிதையில்
குரல் யாழ் பொழியும் இசை மழையில்
செஞ்சொல் மெருகினில் சிலைவிழிகளிலே
சிந்தனை யாவையும் உருவாக்கும்.
அஞ்சுதல் அறியா அருங்கலைஞானியே
அறிவொளி வீசும் சூரியனே!
வஞ்சக உலகம் உணராதொழியினும்
உயிர்த்துடிப்புடனே உழைத்திடுவாய்.
நெஞ்சுரமிகுந்தாய் நாயகனேநீ
நாட்டின் செல்வம் வாழியவே!

## எல்லையற்ற வல்லமை!

எல்லையற்ற வல்லமை
எங்குமுள்ள வல்லமை!
அல்லலற்ற அச்சமற்ற
ஆண்மைமிக்க வல்லமை!
கள்ளர் வந்து கொள்ளைகொள்ளும்
கனகமல்ல வல்லமை
புல்லர் வந்து கவருகின்ற
பதவியல்ல வல்லமை
பள்ளர் கூடி பயிரறுக்கும்
பூமியல்ல வல்லமை
வில்லர்வந்து வெற்றிகொள்ளும்
வீரமல்ல வல்லமை!
எங்குவன்மை என்று தேடும்
ஏக்கமல்ல வல்லமை
உள்ளிருக்கும் வல்லமை!
உண்மையான வல்லமை!
இங்கு வுந்தன் இதயமீது
இருக்குதந்த வல்லமை!
அங்கிருக்கும் ஆன்மவன்மை
அறியும் அறிவு வல்லமை
மங்கிடாத மாசில்லாத
மாதவத்தின் வல்லமை!
எங்கு முள்ள வல்லமை
எல்லையற்ற வல்லமை! (எல்லை)



## வானமுதம்

கவிஞன்:— காலமெனும் சிற்பி செய்யும்
கவிதைத் தாய்க் கோயிலடா
கோலமின்னும் இயற்கையருள்
கோடிமலர்த் தோட்டமடா!
ஓலமிடும் மானிடனே
உன்னறிவின் ஊட்டமடா
சோலையெழும் ஞானவெளி
சங்கீதம் கேட்டிடடா!

விஞ்ஞானி:— காலத்தை வீணுக்கும்
கவியரசே உன் கவிதை
ஜாலத்தால் இவ்வுலகம்
தூங்குவது இனியில்லை!
ஆளத்தான் வந்தோம் எம்
அறிவுள்ள விஞ்ஞான
வீரத்தின் வல்லமையால்
உலகெங்கள் உடைமையடா!

கவிஞன்: பல்லாண்டு காலமதாய்ப்
பொழிகின்ற மழையூற்றில்
சில்லிட்ட மண்துளியின்
சிற்றணுவின் மானிடனே!
சிற்றறிவுப் புலமையிலே
சத்தியத்தின் பேரொளியாய்ச்
சுற்றுகிற காலமெனும்
சகடத்தை மறந்தாயோ?

விஞ்ஞானி:— காலமென்னும் காரணமும்
தூரமெனும் தொல்லைகளும்
கனவுலகில் கதைக்கின்ற
கவிஞர்க்குத் தெரியாது.
காலக்கன வேகத்தை
கடையூழி முடிவுகளை
கணக்கிட்டு அதன் விதியை
கைப்பிடியில் அடக்கிடுவோம்!

கவிஞன்:— கற்றவித்தை காட்டுகிற
கேட்டறிவுப் புலவா கேள்!
காலமெனும் காட்டாறு
கரைமீறி ஓடுதடா!
கேலிமிகும் உலகெல்லாம்
காலம் செய்பாலமடா!
கோடியுகக் கதைபலவும்
கூவுகிற கற்பனையும்
காலமெனும் கவிஎழுதும்
கலைமலியும் காவியமாம்.

கோல உயிர்க் குலமெல்லாம்
குலவுகிற வாழ்வெல்லாம்
காலமெனும் கன்னியவள்
கண்ணிமையின் லீலையடா!
காலைப்பொன்சூரியனும்
கார்முகிலின் சந்திரனும்
காலமெனும் வண்டியிலே
கடையாணி சக்கரமாம்.
கடவுள்அருள் கருணையினால்
காலமழை பெய்யுதடா!

**விஞ்ஞானி:—** காலத்தைக் கூறு செயும்
கலையெங்கள் விஞ்ஞானம்
கலைமதியும், கதிரவனும்
கணக்கில்லா தாரகையும்
கூரிய எம் அறிவொளியில்
கோளத்துக் கூறுகளாம்!
கடவுளென்று நீ கூறும்
கற்பனைக்கு ஏது இடம்?

**கவிஞன்:—** தரை தன்னை மறந்துவிட்ட
தனிமரம்போல் ஆடுகிறாய்!
தாய் முகமே காணாத
தனிமகவாய்ப் பேசுகிறாய்?
உலகதிரப் பேசுகிறாய்
உன்னாலே என்னாகும்?
ஒன்றைமற்றொன்றாய்
மாற்றுவதே உன் ஞானம்.

ஒன்றும் புதிதாக
ஆக்காதுன் விஞ்ஞானம்.
ஒவ்வொன்றும் புதுமையடா,
உயரியற்கை சக்தியிலே!
அதனை மறுத்ததனால்
அறிவரசன் ஆவாயோ?
வான் பொழியும் மழையூற்றும்
வாள் மின்னல் வீச்சுகளும்
வந்திடுமா நண்பாஉன்
விஞ்ஞானக் கூடத்தில்?
உலகாளப் பேசுகிறாய்
உனையாளக் கற்றாயோ!
வான் சுற்றி விட்டாய் நீ,
ஊர் சுற்றிப் பார்த்தாயா?
வாதுபல செய்யும் நீ
வைக்கோலைச் செய்வாயா?
ஆறறிவு சேர்ந்தாலும்
ஆறொன்றைச் செய்திடுமா?
ஆயுளெல்லாம் முயன்றாலும்
ஆல்விதையைச் செய்வாயா?
நெடுங்கலைகள் ஆனாலும்
நெற்பயிரைச் செய்திடுமா?
சந்திரனைத் தொட்டது போல்
சூரியனைத் தொடுவாயோ?
யந்திரங்கள் செய்துவிட்ட
சிந்தனையில் நீ காணும்
காட்சிகளின் காட்சியதாய்
கற்பனையின் சூழ்ச்சியதாய்
கருத்தின்கருவொளியாய்க்
காணுவதே சக்தியடா!

விஞ்ஞானி:— மோனத்துப் போதையிலே
மதிமயங்கு மாக்கவியே!
வேதாந்தக் கதைகட்டும்
விதிகெட்ட வாக்கரசே!
வானத்தைச் சாடுதடா!
வன்மையுறு விஞ்ஞானம்
பாலத்தில் ரயில் போக
பாதையிலே கார் தாவ
ஆழத்தில் பாயுதடா
அணி அணியாய்க் கப்பல்கள்.
மலையருவி வீழ்ச்சிகளை
மின்சார மாய்மாற்றி
மாயப் புவி மீதென்
மதிபோலே மின்னுதடா!
மேதினியை ஆட்டுதடா,
மேன்மையுறு விஞ்ஞானம்
காலத்தை வெல்லுதடா
கனவேக விஞ்ஞானம்.

கவிஞன்:— விஞ்ஞான வலிவின்றி
வான்பறவை தாவுதடா!
வண்ணவண்ண மீனுக்கு
வழிபோட்டுத் தந்ததுயார்?
கானுலவும் பிராணிகட்கு
கல்லூரி வைத்தது யார்?
பகுத்தறிவுப் பகையின்றி
பண்புடனே வாழுதடா!
வீண்பெருமை பேசுகிறாய்
வீம்பு செய்யும் மானிடனே!

வாழத் தெரிய வில்லை
  வேதனைகள் தீரவில்லை
வெடிமருந்தைக் குழந்தையிடம்
  ஒப்படைத்த வினைபோல,
உலகறியாச் சிறுபிள்ளை
  உலகாளும் கதைபோல,
உன்கையில் விஞ்ஞானம்
  விழிப்பதுவும் விந்தையடா!
நார்பூட்டித் தேரிழுக்க
  நண்பா நீ வல்லாயோ?
வேர் வெட்டி உரமாக்கி
  வளர்ப்பாயோ வேலமரம்?
ஆருயிரை அழித்தபின்னர்
  ஆருலகை ஆள்வார்பின்?
சூறையிடும் ஜீவர்களை
  சூனியமோ விஞ்ஞானம்?

விஞ்ஞானி:— வித்தாரக் கவிராயா!
  வீண்வார்த்தை இனிவேண்டாம்
விஞ்ஞானம் இயற்கைதனை
  வெல்லுவது உறுதியடா!
விண்கோள வீதி யெலாம்
  வலம்வந்து கொடிகட்டி
உலகதிர பாதாள
  உயிரெல்லாம் தானதிர—
காட்டுமலை யெங்கும்
  கண்பறிக்கும் மாளிகையை

விடைக் கூறும் ஒரு
வித்தைமிகு யந்திரத்தால்
மேட்டுப் புவித்தலத்தை
மெழுகி மெதுவாக்கி
பாட்டிசைக்க ஒருகருவி
பண்பாடப் புதுக்கருவி
மீட்டும் மனித விலா
முடிவற்ற வீணையிலே
காட்டும் சங்கீதக்
காட்சிக்கு ஒருகருவி
எல்லாம் இயந்திரமாய்
இப்புவியைத் தான்மாற்ற
வல்லதடா விஞ்ஞானம்,
வரகவியே போய்வருவாய்!

இவ்வாறு வீரச் சபதமிட்ட விஞ்ஞானிகள் எல்லோரும் இயற்கையை வெல்ல ஏதேதோ ஆராய்ச்சி செய்தார்கள். புதுப்புது இயந்திரங்கள். போர்செய்யும் மாயங்கள். கணிபறிக்கும் கருவிகள். வானிடிக்கும் வாகனங்கள், மலையிடிக்கும் புது விசைகள் எல்லாவற்றையும் குவித்தனர்! ஆக்க வேலைகளை விட, அழிவுச் சக்திகளைத்தான் அதிகம் கண்டுபிடித்தனர்.

காலம், வேகம், காட்சி முதலியவற்றை வென்று கவர்ச்சியின் காந்தமாக விளங்கியது விஞ்ஞானத்தின் படைப்பு! ஆனால் அந்த அதிசய யந்திரங்களை யார் பயன்படுத்திக்கொண்டார்கள்? மண் வெறி பிடித்து, அதிகார ஆசை கொண்டு மகாயுத்தத்தை மூட்டி விட்ட சர்வாதிகாரிகளின் போர் வெறிக்கே மனித

விஞ்ஞானம் பயன்பட்டது! மக்களையும் இந்த இயந்திரங்களோடு ஒன்ருக்கி ஆட்டிவைத்தனர் சர்வாதிகாரிகள்! வீரம் பேசிய விஞ்ஞானிகள் எல்லாம் யுத்த வெறியர்களின் அடிமையானார்கள்!

யுத்த வெறி பிடித்த சர்வாதிகாரியின் ஆணை பிறந்தது! ராணுவம் திரண்டது! வெடிக் குண்டுகள் வீசப்பட்டன! மலைகள் தூளாயின! காடுகள் அழிந்தன! பச்சை மரங்களெல்லாம் புகைக் கரிகளாக்கப்பட்டன! பால் தரும் பசு மந்தைகள் ராணுவத்திற்கு ஆகாரமாயின! பயிர் தரும் வயல்வெளிகள், அவர்கள் பந்தாடும் திடல்களாயின! வெடி மருந்தும் புகைப் படலமும் உலகை மட்டுமல்ல. வானவெளியைக்கூட விஷக் காற்ருக்கி விட்டன!

காட்டு மரங்கள் அழிந்ததால், கால மழை பெய்ய வில்லை. பசுமலைகள் நாசமானதால் பருவமழை பெய்ய வில்லை. தோப்புத் துரவுகள் தொலைந்ததால் தென்றலும் வீசவில்லை! மேகத்தைக் கொண்டு வரும் மேல் காற்றுக்கூட விஞ்ஞான விஷப் புகையால் அதன் கடமையைச் செய்ய முடியவில்லை. எங்கும் வறட்சி! எல்லையற்ற கானல்! எரியுது உலகம்! எல்லோரும் தவிக்கிருர்கள்! மழை இல்லை! நீர் இல்லை! மகிழ்வில்லை மாந்தர்க்கு! நெருப்பாகி விட்டது உலகம்! பஞ்சமோ பஞ்சம்! உலகத்தின் பிடறியைப் பிடித்தாட்டியது வறுமை! ஒவ்வொரு நாடும் மற்ருெரு நாட்டின் மீது பொருமை கொண்டது! விஞ்ஞானிகள் கண்டுபிடித்த அணுக் குண்டுகளை பதிலுக்குப் பதிலாக ஒரு நாடு மற்ருெரு நாட்டின் மீது போட்டுப்பி

தப் பறந்து வந்து போர்ப் படை? புகை கக்கிய விமானங்கள் விஷக் குண்டு மழையைப் பொழிந்தன!

அதோ! அதோ! பறந்து வருகின்றன! பூமியின் கர்ப்பத்தைப் பிளந்து புகையாகச் செங்குத்தாகக் கீழ் நோக்கிப் பாய்ந்து விழுகின்றன அணுக் குண்டுகள்! ஹைட்ரஜன் நாசங்கள்!

வானத்தின் கோளங்கள்- விண் மீன்கள் யாவுமே நிலை தடுமாறிப் பிரிந்து ஓடுகின்றனவே! சூரியப் பிரகாசம் எங்கே? சந்திரன் உதயம் எங்கே? கதிரவனையே நீலநிறமாக்கி விட்டது விஷப்புகை! உலகின் ஒளி மங்கி விட்டது! எங்கும் இருள்! ஒரே வெடித் திடல்! வேட்டொலி! புகை எழுப்பினன் விஞ்ஞானி. அதற்கொரு புகைப் போக்கியைக் கண்டு பிடித்தானா அவன்? இல்லை! அழிக்கத் தெரிந்தவனுக்கு ஆக்கத் தெரியாதே! எங்கோ அசரீரியாக இருந்த ஒரு கவிஞன் இந்தப் பிரளய காலத்தையும் காண்கிறான்! ஊழிக் கூத்தைக் கண்டு உளம் நடுங்குகிறான்! அழிவின் காட்சி சில நாட்களில் மறைந்து விடும். ஆனால் இதோ இக்காட்சியைக் கவிதையிலே தீட்டிய கவிஞனின் உயிர்ச் சித்திரம் என்றென்றும் நிலைக்கும்! பாவிகளுக்கு ஒரு பாடமாகும்! யுத்த வெறியர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகும்.

அலைகடல் ஆவியாகி
ஆகாயம் நோக்கிப் பாயும்!
மலையுடல் திமிங்கிலங்கள்
மெழுகென எரிந்து மாயும்!

தொலைவிலே கப்பல் எல்லாம்
துகள் துகளாகி வேகும்!
கொலை வெறி கொண்டவீணர்
கருத்தினைப் போல வேகும்!

அனல் உமிழ் திப்பிழம்பு
அணிஅணியாகத் தாவும்!
கனல் கக்கும் வானம் பாயும்
கதிரவன் தன்னைச் சூழும்
மணல் எல்லாம் பொன் குழம்பாய்
மடைதிறந் தோடிப் பாயும்!
புனல் இலாப் புவிவெடித்துப்
புரட்சிகள் செய்யுதாங்கே!

காட்டினில் குன்று சூழும்
கழனியில், சோலைதன்னில்,
வீட்டினில் உள்ள தோட்டம்
வாசனைச் சோலை தன்னில்
சூட்டுத் தீ சூழ்ந்ததாலே
சுற்றிய நெருப்புக் கால்கள்
திட்டிய கூர்வாள் போன்று
திக்கெட்டும் பாய்ந்து ஓடும்!

வாட்டுது வாட்டுதந்தோ
வீண்பகை அழிவு தன்னால்
கேட்டினைத் தேடிக் கொண்டான்
கெடுகின்றான் மனிதனின்னாள்!
மூட்டிய போர் நெருப்பு
மூண்டெழுந் தாடிப்பாடி
மாட்டுது, மனிதக் குப்பை
மரணத்தின் சிறிய தினி!

இதோ! மனித மந்தையின் பகுத்தறிவிலே பிறந்த மண் வெறியரால் ஏவப்பட்ட அடிமை விஞ்ஞானத் தால் விளைந்த அந்திமக் காட்சி! அதர்மத்தின் பரிசு! அகந்தையின் முடிவு! கொடுமையின் தீர்ப்பு!

விண்வேந்தன் காய்ந்திட்டான்
வாட்டும் கனல் வனத்தே
மண்மாது கர்ஜித்தாள்
மண்டலங்கள் சிதறிடவே...!
கண் கெட்டுக் கரியாகும்
கால் வெடித்துப் பொரியாகும்
பெண்ணொருத்தி பேயாகிப்
போதை நடங்கொண்டதுபோல்!

வகிடெடுத்துப் பெண்தலையை
வாளாலே சீவுதல்போல்
பகிரண்டந் தன்னையொரு
பூகம்பம் வெட்டி வெட்டிச்
சகிக்காத சாக்காட்டைச்
சாதிக்கும் நிலையதனை
யுகக் காலம் போயிடினும்
உள்ளபடி சொல்வார் யார்?

கண்கள் தெறித்து விழும்
கானல் மூண்டு எழும்
மின்னல் வெட்டி எழும்
மேல் வான் சிதறி விழும்

வெண்ணை உருகையிலே
வேகும் நெய்யேபோல்
மண்ணும் பஞ்சாகும்
மாயப் புகை சூழும்!

மங்கள நதி வயல்கள்
மாறின சுடு காடாய்!
எங்கும் பிணத் தோற்றம்
எரிமலையின் சீற்றம்!
வங்கக் கடல் ஆழம்
வற்றிய முடை நாற்றம்!
செங்கதிரின் ஏற்றம்
சித்திரை இடுகாட்டில்!

கல் நொறுங்கிக் குழம்பாகிக்
காய்ந்தோடும் எண்ணெயெனச்
சொல்லறுத்துச் சாடிவரும்
சவநாற்றச் சுழற் காட்டில்
அள்ளியதோர் அனல் வெளியில்
அனைத்துயிரும் தீய்ந்ததுவால்,
துள்ளிடவும் துயர் உறவும்
இல்லையொரு உயிராங்கே!

எலும்புக் கரிமலைகள்
எண்ணித் தொலையாது!
மதமும், ஜாதியிலே
மயக்கும் நிறமில்லை!

ஆணும் பெண்ணுமில்லை,
    ஆங்கே பேதமில்லை!
அடிமை அதிகாரம்
    அனைத்தும் பிடிசாம்பல்!

வெந்தது புதுவுலகம்
    வீழ்ந்தது நாகரிகம்!
சிந்திய கண்ணீர் தான்
    செய்வது இனியென்ன?
சிதறிய சிற்றறிவால்
    செத்தது மனிதகுலம்!
சந்ததி வேரடியின்
    சாம்பலும் வெந்ததுகொல்!

அந்தோ மானிடனே!
    அழிவின் மாணவனே!
அழிவைப் எண்ணிப்பின்
    அழவோர் உயிர்கூட
அவனியில் இல்லாமல்
    அழித்தாய் முளைகளையும்!
குழந்தைகள் என் செய்தார்?
    குருத்துகள் என் செய்தார்?

அவரை அழித்தாய் நீ
    அந்தோ கொடுமையடா!
அழிவே விஞ்ஞானம்
    என்றால் அது ஒழிக!

கல்வியின் தொல் மாட்சி
கணக்கின் ஆராய்ச்சி,
கவிஞர் மனிதர்க்கே
கல்லறை கட்டிடவோ?
கலையின் திருக்கோயில்,
கடவுள் நிலைகாணக்
கொலையின் கல்லறையில்
கொலையைக் கும்பிட்டான்
கொலையின் பூசாரி
குலமோ மனிதகுலம்!
இலையோ இதயத்தில்
இரக்கம் இலையோடா?

இந்தச் சோகமான பூகம்பத்துக்கு அப்பால் வெகு தூரத்தில் வானில் பறந்தபடியே கவனித்த சில விஞ்ஞானிகள் கனலைத் தாளாமல் விமானத்தில் கிளம்பி காற்றுவரும் இடத்தை நாடிப் பறந்தனர். பறந்துகொண்டே இருந்தனர்...கடைசியாக அவர்கள் ......

அமைதியின் சூழ்நிலையை
அடைந்தனர், அவ்வேளை
சமரசம் என்றதொரு
சொல்லின் பொருளேபோல்
தொலைவில் வீசியது
தென்றல் சீதளமாய்!
அலையுடன் அமுதநகை
அசைந்தது மறுகணமே!

விண்ணரசன் வந்தான்
　　வெறிகொண்டாள் மண்மகள்
தண் மேகக் கரத்தாலே
　　தாங்கித் தன் வெண்கதிரால்
தீண்டிவிட்டான், மண்ணரசி
　　திளைத்துவிட்டாள், மழைமுததம்,
கொண்டதொரு பெருமூச்சில்
　　மொண்டு கொண்டாள் வானமுதம்!

இவ்வாறு வானமுதமென மழை பெய்யும் குளிர்ந்த பிரதேசத்தில், விமானத்தை இறக்கினர். சில விஞ்ஞானிகள்! மாயமாந்தரின் அழிவுக்கரம் படாத மாமலைச் சாரல் அது! மாலை மழையிலே சோலை வளங்கள் சொக்கியிருக்கும் பரவெளி அது! இன்பமும் குளிர்ச்சியும் சேர்ந்து துலங்கும் அமரபூமி அது! அமைதியின் அமுதக்கடல் அது! புனிதத்தின் உறைவிடம் அந்த இன்பப் பெருவெளி! யுத்தப் பேயின் பாவமூச்சுப்படாத புண்ணிய பூமி அது. அதுதான் இமயமலையின் இன்பச் சாரல்! பொதியமலைச் சாரல் போன்ற புனித நல்லிடம்! வெறியர்கள் இதுவரை கண்டறியாத வானமுதப் பொற்கோயில்.

யுத்த நாசத்துக்குக் காரணமாயிருந்த அந்த விஞ்ஞானிகளின் உள்ளம் சிலிர்க்கிறது! உடல் புத்துயிர் பெறுகிறது. தூரத்திலிருந்து ஒரு இன்ப கீதம் காற்றிலே மிதந்து வந்து அவர்கள் இதயத்திலே பாய்கிறது! பாட்டின் அலைகள் புறப்பட்ட திசை நோக்கிச் செல்லுகின்றனர்! பாடல் புறப்பட்ட இடம் பாவி

களின் கண்களுக்குத் தெரிகிறது. பாடும் உருவமும் கொஞ்சம் மங்கலாகத் தெரிகிறது.

சாந்தியின் பூரணத்திலே, பொலிவுற்று விளங்கும் மனித சரீரம்! நூற்றிருபது ஆண்டு நிறைந்த பழுத்த மேனி அவருடைய மதுரமான இதழ்களில் இருந்து இன்பவான் கவிதை இயங்குகிறது! கேட்டனர் கொடுமை நாட்டார்! அழிவுக்கே தொண்டு செய்த அவர்களுக்கு இந்த அமரகீதம் ஆனந்த வெள்ளமாயிருந்தது!

அன்னையின் பொறுமையில்
அமைவது சாந்தம்.
இன்னிசை காற்றில்
எழுவது சாந்தம்.
மண்ணக வாழ்வின்
மணமே சாந்தம்.
விண்ணில் தவழும்
ஒளியே சாந்தம்... (அன்னை)

தத்துவம் தாண்டிய
தயையே சாந்தம்
சித்தத் தெளிவிலே
ஜொலிப்பது சாந்தம்.
நித்தியமான
நினைப்பே சாந்தம்... (அன்னை)

(வைஷ்ணவ ஜனதோ பாடலின் மெட்டோடு ஒட்டிப் பாடுக.)

*வானமெல்லாம் நிறைந்து வையமெல்லாம்*
*தழைக்க ஒலித்தது இந்த வானமுத கீதம்!*

*1953-ம் ஆண்டு சொல்லின் செல்வர் திரு ஆர். பி சேதுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கிலே "வானமுதம்" எனும் தலைப்பில் அரங்கேறிய* **கவிதை.**

**ஆக்க வழிச் சென்று அறநிலை காக்கும் கவிஞருக்கும். அறிவின் வேகத்திலே தன்னையறியாமல் உலக அழிவுக்குக் காரணமாகி விடும் விஞ்ஞானிக்கும் நிகழ்ந்ததொரு கருத்துப் போர்.**

# ஒலி உயிர்த் தெய்வம்!

உலகெனும் மரத்திருந்து
　　உதிர்ந்தது மற்றுமோர்நாள்.
ஒளிக்கதிர் சூரியன் போய்
　　ஒளிந்தனன் மேற்குத் திக்கில்

இறந்தது ஒரு நாள் ஆங்கே
　　இரவெனும் பறவை வந்து
பறந்தது இருட்டிறக்கை
　　விரிந்தது மௌனச் சோகம்.

இனந் தெரியாத அச்சம்
　　எழுந்தது இதயக்காட்டில்
புகைந்தது குப்பை மேட்டில்
　　புகுந்தது புது நெருப்பு.

வானத்தை உற்றுப் பார்த்தேன்
　　ஒளிமீன்கள் என்னைக் காண
விரும்பாமல் விண்திரைக்குள்
　　விரைந்தன வானம் எங்கே?

மேகவெண் பனி வீட்டுக்குள்
    மறைந்தது தனிமையென்னும்
சோகத்தின் முள்படுக்கை
    சுள்ளென குத்துதென்னை.

எங்கிலும் பாழிருட்டு
    எல்லையும் தெரியவில்லை!
ஏங்கிய இதயத்துள்ளே
    எழுந்தது கோடியின்னல்!

கற்றநூல் வித்தை யெல்லாம்
    கலககத்தைத் தீர்க்கவில்லை.
காவியப் புலமை மிக்க
    கவிதையும் உதவவில்லை.
சாத்திரச் சமயங் கூறும்
    சதகோடி தத்துவங்கள்
சங்கடம் வந்தபோது
    சரியாகப் புரிவதில்லை.

கண்ணுண்டு காட்சியில்லை,
    கருத்துண்டு கவனமில்லை,
கடலுண்டு அலையே இல்லை,
    காரிருள் அச்சக்காட்டில்!
கடவுளின் நினைவு கூட
    கரைந்தது அந்த வேளை
கடுங்குளிர் பனியில் வீழ்ந்த
    கருங்குயில் போல வீழ்ந்தேன்!

துயர் எனும் தொட்டிலிட்ட
    தூங்காத குழந்தை போல
துடித்த கண் அழுததாங்கே,
    தொல்லையின் எல்லைக்கோட்டில்!

புறப்பட்ட பனியின் காற்றுப்
    படகினில் நாதமென்னும்
மணமகன் ஏறிக்கொண்டான்
    மணமகள் கீதம் என்பாள்!

முதலிலே நாணிக்கொண்டாள்,
    மெதுவாக நாதனோடு,
மயங்கியே அமர்ந்தாள் அங்கு
    மதுர சங்கீதம் பொங்க!

பரந்த அப் பாழிருட்டில்
    பிறந்தது ஒலியின் கூத்து?
பொலிந்தது புதிய ஓசை
    புகுந்தது பார் மீதெங்கும்.

தவழ்ந்ததோர் தெய்வ சக்தி
    தடித்த அவ்விருளின் காட்டு
வெளியெல்லாம் மெல்ல மெல்லப்
    புகுந்தது மறுகணத்தே...

ஒருகோடி கோடை மின்னல்
    உடற்கூத்து செய்ததைப் போல்
நாதமாம் சக்தி வந்து
    நானில மெங்கும் ஆடும்!

கரியவிழி கனல் ஒளியைக் கக்குதல்போல்
கான ஒலி காடெங்கும் ஒலித்தபோது,
கானகத்து இருளெல்லாம் காலைபோல
கனகமணி ஒளிக்கதிராய் கனலக் கண்டேன்.

ஒளியற்ற ஊமைக்காட்டில்
ஒலிவெள்ளம் இணையும்போது,
உயிர்பெற்ற உடலைப் போல
உலகெல்லாம் துள்ளி ஆடும்.

ஒடுங்கிய உடலும் ஊனும்
உள்ளமும் உணர்வும் ஆங்கே,
ஓங்கிய ஒலி வெள்ளத்தில்
உதித்தநல் ஒளியைக் காணும்!

கானிலே இருளும் காணோம்
கருமையில் வெறுமை யில்லை
வானிலே பனியு மில்லை
விண் முகில் இரவும் இல்லை.

எழுந்திட்ட ஒலியின் ஜோதி
உதவியால் விழிதிறந்தேன்
எல்லையின் எல்லை கண்டேன்
எங்கிலும் ஜோதிவெள்ளம்!

சொக்கிய நிசிநேரத்தில்
சூரியன் அழகைக் கண்டேன்.
ஒலியிலே ஒளியைக் கண்டேன்
ஒலி உயிர்த்தெய்வம் காணீர்!

கண்ணுக்கு ஒளிநல்ல ஜோதியானால்
கருத்துக்கு ஒளிநல்ல நாதமாகும்.
நாதத்தில் கீதமும் சேர்ந்துவிட்டால்
நவமான வண்ணங்கள் தெரியக் காண்போம்.

சென்னை-600017
நாள்.......................
(செய்தி-மக்கள் தொடர்புத்)

## தர்மதீபம்

தேச பக்தி சேவை மனம்
 தியாக புத்தி
தெய்வபலம் சத்தியமும்
 தேய்ந்த நாட்டில்

பாசமிலாக் கீழ்மக்கள்
 பெரியோர் ஆளல்
பார் வெடிக்கும் பூகம்பம்
 ஏன் வராது?

பகற் கொள்ளை வியாபாரம்
 ஏன் ஆகாது?
பாதையிலே பாரதத்தாய்
 பெற்றெடுக்கும்

பரிதாபப் பிள்ளைகட்குப்
 பலநாட்டாரும்
பரிவாகத் தருமமாய்
 வழங்கிவிட்ட

பாலர்களின் பசியுணவைப்
பதுக்கி விற்றுப்
பணக்காரப் பெருவயிறர்
பிரபுக்கள் ஆனால்
பயிர் பச்சை முளைக்குமா
இந்த நாட்டில்?
பருவமழை பெய்யுமா
பொய்யர் மண்ணில்?
பார்த்தவர்கள் ஏசாரோ,
பரத நாட்டை?

படிக்காத ஏழைகளின்
பணம் பறிக்கப்
பத்திரிகைச் சிற்றின்பப்
படங்கள் காட்டிப்
பாமரனின் மனதையெல்லாம்
படுக்கையாக்கிப்
பாலியர்க்குவிபசாரப்
பாடஞ் சொல்லும்
பாவியர்கள் பத்திரிகை
அதிபரானல்,
பண்பாடு வளருமா
இந்த நாட்டில்?
பெருங்கொள்கை நூலெல்லாம்
குப்பைதானோ?
பரிதாபம் பரிதாபம் பரதநாடே!
பொறுமைக்கு எல்லையிலா பரதநாடே!

பண்பற்ற பகல் வேஷக்
கும்பல் சில்லோர்
பெரியவர்கள் போல் நடித்துப்
பேசவல்லோர்
பொய்யுடலின் மோகத்தால்
முன்னும் பின்னும்,
பெரிதாகப் படம்பிடித்துப்
பாடிக்காட்டிப்
பெருநாட்டின் பிள்ளைகளைச்
சீரழிக்கும்
பாவத்தை, பணம்சேர்க்கும்
விபசாரத்தை,
பெண்மைத் தோல் சதைவிற்கும்
வியாபாரத்தை... ,
பெட்டைமனக் குள்ளர்களின்
பலவீனத்தை
பயங்கரத்தைக் கலையென்று
போற்றி நல்ல
பட்டங்கள் பொன்னுடை
வழங்குகின்ற
படித்தவர்கள் திரிகின்ற
இந்த நாட்டில்
புது வாழ்வு மலருமா...
பெருமை உண்டா?

பாஞ்சாலிப் பெண்மையைச்
சீரழித்த
பாவி துச்சாதனன்
கலைஞன் என்றால்...

பாரதத்தில் இன்றுபல
பெரியோரெல்லாம்
பெருங்கலைஞர் அவர் நன்கு
வாழ்க! வாழ்க! !

பாருக்கோர் பாரந்தான்
இந்த நாடு,
பரிதாபம், பரிதாபம்,
பரத நாடே!

வேசிமகள் கண்ணகிக்குச்
சிலையெடுத்தால்
வீரமிலான் திருமகளைக்
கைப்பிடித்தால்

ஆசைமகன் அதிகாரி
ஆகிவிட்டால்,
அந்நாட்டில் நல்லவர்கள்
ஏனிப்பார்...?

அமரமகா கவியரசர்,
ஏன் பிறப்பார்?
அம்மண்ணை உலகந்தான்
ஏன் மதிக்கும்?

உயிர்காக்கும் மருத்துவனே
விஷங்கொடுத்தால்...
உயிராசை எதற்கடா?
செத்த வீட்டில்,
சங்கீதக் கச்சேரி
செய்வதேபோல்
சந்தர்ப்ப வியாபாரக்
கள்ளச் சந்தை
சரக்கெல்லாம் கலப்படமாய்க்
குப்பையாக்கி
சரியாகக் காசாக்கும்
சல்லிக்கூட்டம்,
சட்டசபைப் பதவிக்குச்
சண்டையிட்டால்
அந்நாட்டில் நீதிபதி
என்ன செய்வான்?
ஆண்டவர்க்கு அம்மண்ணில்
வேலை என்ன?
அந்நாட்டுக் கோயில்களில்
பேயோ தெய்வம்! ?
அந்நாடே தருமத்தின்
தூக்குமேடை
அநியாய விஷக்காடு
அந்த நாடே!

அந்நியர்க்கு அடிமையாய்
ஆகும் சந்தை
அம்மண்ணில் குடியேது, படையேது
குரங்குகட்கு,
அறிவேது, அணியேது,
அமைதி ஏது?

கொலைகாரன் கோயிலுக்குத்
தருமகர்த்தா
கறிக்கடையில் அருட்பாவைப்
பொருட்பால் செய்தால்,
காந்திபவன் ஓட்டலிலே
கள்ளை விற்றால்...
குட்டைமனக் குறளிமகன்
கொடுங்கணக்கன்
கன்றில்லாப் பசுமாட்டில்
கறந்த பாலை,
கடவுளுக்கு அபிஷேகம்
செய்வோர் தம்மை,
தோலுரிக்கச் சூல்மாட்டைக்
கொல்வோர் தம்மை
துடித்தெழுந்து தடுக்காத
வீரர் நாங்கள்,
தேசமகாவீரத்தைப்
பாட வந்தோம்,

தயவு செய்து மன்னிப்பீர்
போதும் இன்பப்
பாடல்களும், கவிதைகளும்
பயனே இல்லை!

பாலென்று காகிதத்தில்
எழுதி விட்டுப்
பிள்ளைக்குப் பாலூட்ட
எண்ணி விட்டோம்!
போரணியில் பீரங்கி
முழங்கும்போது,
பொம்மைகளை அனுப்பினல்
போரில் வெற்றி
பலிக்குமா, புகழ் வருமா,
உழைப்பில்லாமல்
பெருவீரம், விளைந்திடுமா,
பாறைமீது
பழத்தோட்டம் போடுகின்ற
மூடர் போல
பெரும் பேச்சுப் பேசுகிருேம்
காலம் நம்மைப்
பரிதாபமாய்க் கண்டு
சிரிக்குதந்தோ!
பரிதாபம், பரிதாபம்;
பரத நாடே!
பொறுமைக்கு எல்லைகாண்
பரத நாடே!

பதவக்கு இதயத்தைப்
    பறிகொடுத்தால்
பார்த்தவர்கள் ஏனிங்கு
    சிரிக்கமாட்டார்?
பகைவர்கள் ஏன் நன்கு
    பேசமாட்டார்?
போர்வீரர் தலைகுனிந்து
    பிணங்கள் ஆனோம்!
பேருண்மை உருவான
    பொன்னாடே! எம்முயிரே!
ஊர்கெட்ட நாற்றத்தால்
    உளம்கெட்டுப் புண்ணான,
வேதனையால் பேசுகிறோம்,
    உணர்ச்சிகளைக் கொட்டுகிறோம்,
உண்மையிலே இந்நாளும்
    அந்நாளாய் ஆயிடுமோ?
என்றதொரு பலவீனம்
    எம்மையெலாம் சூழ்கிறது,
இன்றிங்கே பேரச்சம்,
    அன்றங்கே அடிமையிருள்!
இன்றெம்மைக் கொல்லுவது
    உடன்பிறந்த பெருவியாதி
அன்றெம்மை அழித்ததுவோ,
    அந்நியரின் தடி ஆட்சி!

என்றைக்கும் [illegible]றவினை
நிலை இதுவே என்றால்

ஏனவர்க்குத் தாய்நாட்டுப்
பற்றிருக்குமிங்கே?

சென்றபேய் நிறமாறி
திரும்பிவந்த வினைபோல்

வெள்ளையர்க்குப் பதிலிங்கு
உள்ளவரால் கொடுமை!

எல்லையின்றிப் போனதறல்
எரியுதடா உள்ளம்.

நல்லவர்கள் உள்ளமெலாம்,
நடுங்குதடா தோழா!

தொல்லைநிலை மாறிநல்ல
தூயநிலை வர ஓர்

கள்ளமிலாத் தலைவன்இங்கு
கடுகிவராவிட்டால்,

காக்கியுடை போட்டஒரு
சர்வாதிகாரி...!

கனல்கக்கும் துப்பாக்கி
பீரங்கி மறவன்,

கொலைக்குற்றம் சாட்டி இந்தக்
கொடும்பாவிக் கும்பல்,

கூட்டோடு நரகத்தில்
குடியேறச் செய்வான்!

குற்றமெலாம் குவித்திட்ட
    குள்ளநரிக் கும்பல்,
கொலையுண்டு தொலைக அவர்
    கொட்டமெலாம் ஒழிக!
கற்றவர்கள் கண்டசம
    தருமத்தின் தீபம்,
ஞாலமெலாம் சுடர்விட்டுக்
    காட்டுக நல்ஜோதி!

# காவேரி

த்தியத்தைப் போல எங்கள் காவேரி
இத்தரையைக் காவல் செயும் காவேரி

த்தம்புதுப் பொன்னியம்மா காவேரி —உன்
சித்திரமே சிங்காரப்பூஞ் சோலை

மலைமலைக் காற்றரசன் பூசை செய்வான்–காவேரிக்கு
மேகராசன் ஓடிவந்து குடைபிடிப்பான்

விராசர் நூலாடை போர்த்திடுவார்–காவேரியை
கடலரசன் கைகூப்பிக் கும்பிடுவான்

ம்பனுக்குக் கவிதருவாள் காவேரி–எங்கள்
கண்களுக்கு ஒளிதருவாள் காவேரி

ன்பமெனும் தீ அணைக்கும் காவேரி—நல்
இன்பமருள் தாயே எம் காவேரி

பரோங்கி வளர்கின்ற கோபுரங்கள்–தாயே உன்
புகழோங்கும் காவியங்கள் பொன்னியம்மா

குளம் எல்லாம் உன் கருணை பெற–என் தாயே
வாரி வாரி பாரிபோல தாராய்–நீ (சத்திய)

## ஊமைக்கன்னி!

வெண்பனிப் போர்வைமூடி வேண்டியமட்டும் தூங்கும்
தண் பயிர் வயல்களெல்லாம் தகவுடை மாந்தர் காண
கண்விழித் தெழுவதேபோல் களித்தன கனிந்த ஞானம்
பண் மிகு சீத்த் தென்றல் முன்வர வந்தாள் கன்னி!

என்னொடு பேசமாட்டாள் இளமயில் கோலக்கன்னி
மன்னுயிர் யாவுமின்ப மானவள் வரவு காணக்
கண்ணொளி பெற்றுத்தூய கவியெனக்காணும் கன்னி
விண்ணிலே தோன்றினாலும் வேண்டிய உறவுக்காரி!

அழகெலாம் அவள் படைப்பு அசைகிறாள் அழகுக்
கன்னி!

பொழிலெலாம் ஒளிபெருக்கும் பூரணி பண்பின்
செல்வி!

பழச்சுவை சேர இன்பப் புதுக்கதிர் வீசி நம்மை
எழச் செய்யும் காலைக்கன்னி என்றுமே ஊமைக்கன்னி!

# தெய்வம் எங்கே?

சூரியன் போல வந்து தினம் புது
ஜோதியைக் காட்டுதம்மா —தெய்வம்
சந்திரன் ரூபத்திலே வந்து—மன
சாந்தியை ஊட்டுதம்மா.

மாமழை ரூபத்திலே வந்து இந்த
மாநிலம் காக்குதம்மா—தெய்வம்
மாசற்ற காற்றினிலே வந்து நம்ம
மூச்சில் கலக்கு தம்மா.

பருவத்தின் காலத்திலே வந்து பசும்
பயிரை வளர்க்கு தம்மா—எழில்
பச்சைக் குழந்தையிலே—பரம்பொருள்
புன்னகை காட்டுதம்மா...

*காலையில் தாமரைப் பூ வனங்கள்*
*காட்டும் புதுவனப்பில்—தெய்வம்*
*கோலங்கள் போடுதம்மா—தெய்வக்*
*கோயில் இத் தேகமம்மா! ...*

*தூங்கும் சமயத்திலே உயிருக்கு*
*தாலாட்டு பாடுதம்மா —நாம்*
*ஏங்கும் பொழுதினிலே வந்து மன*
*ஏக்கம் தவிர்க்கு தம்மா...*

*மலையுச்சி வானத்திலும்—ஏழு*
*மாகடல் ஆழத்திலும்*
*மானிடன் உள்ளத்திலும்—தெய்வம்*
*மாயங்கள் செய்யுதம்மா!*

*எங்கும் நிறைந்த பொருள்—அந்த*
*ஏகக் கடவுளை —நாம்*
*பங்கு செய நினைத்தோம்—பாரகத்தைப்*
*போர்க்களம் ஆக்கி விட்டோம்!*

*இயற்கை எழில் அதுதான்—ஒரு பெரும்*
*எல்லையில்லாத தெய்வம்—அதை*
*செயற்கைச் சிலைகளிலே—காணபெரும்*
*சிந்தனை வேண்டுமம்மா!*

## கவியின் குரல்

உலகமெலாம் வாழ்க எழில்
அன்பு வாழ்க!
உலகத்து உயிரின் வேர்
உண்மை வெல்க!
உலகத்து நாயகிதன்
கருணையாலே.
உலகின்ப சக்தியருட்
கவிஞர் வாழ்க!

தன்மானக் கவிக்குலத்து
தறுகண்மை வீரர்காள்!
தென்மலையின் தேனருவித்
தண்கவிதை யின்கவிகாள்
வடமலையில் வந்துவிட்ட
வீரத்தின் சோதனைக்கு
உடலதிர, உளமதிர
உயிரதிர கவி கொட்டிச்...

சுடுகின்ற சிதையின்
சவப்படையை எரிக்கின்ற...
அடற்சிங்க மறவர்காள்!
அன்னை நில மன்னவர்காள்!
ஊரெல்லாம் ஒளிவீசும்
குடியரசுத் திருநாளில்
உள்ளமெலாம் ஒளிவீசும்
உமக்கடியேன் வந்தனங்கள்

கீழ்த்திசையில் இமயமலை
வெள்ளம் போல,
கனகமணி வங்கத்தில்
கவிஞர் தாகூர்!
தேனமுதப் பொதியமலை
தென்றல் போல
வானமுதப் பாரதியார்
வந்தருள் புரிந்தார்!

ஐயாயிரம் ஆண்டு
அழகிளமைப் புதுமை,
ஐயமிலாத் தமிழ் மண்ணில்
தோன்றிய பல்ஞான
அருட்சோதி தீபங்கள்
வரிசையிலே அடிமை
இருள் தீர்த்த பாரதியோர்
தனி ஞான தீபம்!

இரவிராஜன் ஸ்ரீராமன்
　　வீரப் போரில்
இராவணனைத் தூளாக்கித்
　　துளைத்தெரித்த
ஒரு வாளி வேகத்தில்
　　கவியைத் தீட்டும்,
கவிராஜன் கம்பனுயர்க்
　　குலம் விளங்கத்

திருவோங்கும் கார்த்திகையின்
　　தீபத்திங்கள்
தென்பாண்டித் திருநாட்டில்
　　அவதரித்தான்!
பிறநாட்டு ஆட்சியிருள்
　　பகை தொலைக்க
பெருமான் என்கவி யரசன்
　　வந்துதித்தான்

தெருவெல்லாம் ஊரெல்லாம்
　　தீபமாலை
சுடர்ச் சோதி மலையெல்லாம்
　　ஒளியின் சோலை
புறவீட்டுத் திண்ணையெலாம்
　　அகல் விளக்கம்
பெருங் கற்புக்கனல் அன்னை
　　திருக்கரங்கள்

புதுச் சுடரை ஏந்துகின்ற
புனித மண்ணில்
புதுவுலகில் புரட்சியெனும்
சிறு பிழம்பை
பேரொளியாய்ப் பரசக்தி
தூண்டிவிட்டாள்—(அப்)
பெருங்கனலே பாரதியாய்ப்
பிறந்ததம்மா!

சூரியனைக் காணாத
சூனியம் போல்.
சுதந்திரத்தைக் காணாத
சோகை நெஞ்சில்
வீரமெனும் புது ஒளியை
வெறியின் சூட்டை
உரம் பொங்கப் பாய்ச்சிவிட்ட
ஒளியின் வெள்ளம்!

ஓராயிரம் ஆண்டு
உணர்ச்சியின்றி,
ஒடுக்கிவிட்ட அடிமையெனும்
சவச்சாத்தானை
சூறையிட்டு ஜெயகாளி
பலிபீடத்தில்
வெட்டிவிட்டான் வீர ஒளிக்
கவிதை வாளால்!

தேரைகள்போல் தவளைகள்போல்
    தேய்ந்த நம்மை
சிங்கம் போல் மதயானைக்
    கூட்டம் போல
தேசுமிகு கார்த்திகையின்
    தீபம் போல,
செய்துவிட்ட கவியரசன்
    நாமம் வாழ்க.

மாவலிமைத் தெய்வமெலாம்
    தமிழின் பாட்டால்
மிக மகிழ்ந்து கேட்டவரம்
    தருவதுண்டேல்,
ஏன் எனது பைந்தமிழின்
    வீரப் பாட்டால்
எழுச்சி இங்கே தோன்றுது
    என்று கேட்டான்?

கருக் கொண்ட நாட்டன்பின்
    தெய்வ வேகம்
கதிராகக் கனலாகக்
    கொதித்த தாங்கே
உருக்கொண்ட சிற்றடிமைக்
    குட்டை வற்றிச்
செயல் என்னும் ஆவியதாய்ப்
    பறந்து மேலே

பருவத்தேகூடிற்றுபுரட்சிக்
கொண்டல்
கூட்டத்தில் நாட்டு மெவறு
குமுறக் கேட்டோம்.
கோடையிடி கோடையிடி
கொட்டத் தாளம்
தட்டாத தடுங்காத
க்லைத் தோட்டத்தில்

கொட்டியது கொட்டியது
கவிதை வெள்ளம்
கிட்டியது கிட்டாத
வானச் செல்வம்!
பற்றியது, பற்றியது
புரட்சி யாகம்
முற்றியது மூண்டதுநற்
கருமயோகம்!

இத்தகைய வீர ஒளிக்
கவிதை தந்தான்
எந்தமிழர் மானத்தைக்
காக்க வந்தான்.
சக்திமிகு மொழியென்றால்
அதன் வீரத்தால்
சொத்தைமன மனிதர்தமை
உயர்த்தவேண்டும்.

இத்தரையேஎழுச்சியுற
எட்டுத் திக்கும்
எமது உயிர் முரசொலியைக்
கேட்க வேண்டும்
சத்தியம் எங்கிலும்
தழைக்க வேண்டும்
சாந்தியும் இன்பமும்
சேர வேண்டும்

அத்தகைய வித்தைமிகு
தமிழ் வேதத்தின்
வித்தான சக்தியவன்
ஞானச் சித்தன்!
இந்த புது நூற்றாண்டின்
இதய வேந்தன்
சந்தமிகு பாரதியின்
செந்தேன் சாரம்

தித்திக்கும் கவிதைகளைக் குயில்கள் பாடும்
தத்திவரும் கிளிக்கூட்டம் தமிழ்தான் பேசும்
சித்திரமாம் செந்தமிழை குழந்தை காணும்;
யுத்தஜெய பேரிகையை வீரர் கேட்பார்!
வெத்துமர விறகைப்போல் எரிந்த எம்மை
வித்தை மிகு வீணைகளாய் மீட்டிவிட்டான்
பாஞ்சாலி சபதத்தைக் கேட்டு விட்டால்
பேடிமகன் கூட பலபீமனாவான்!

ஞானரதம் தனிலேறி ஓட்டி விட்டால்
நமது மனம் கலைமதியை ஓடமாக்கும்!
பச்சை மயில் முருகன் இசைப் பாட்டிலந்த
பாரதியை அழகனே தழுவிக் கொள்வான்!
பாரதப் போர் முடித்திட்ட வீரக் கண்ணன்
பாரதியின் வீட்டிலே வேலைக்காரன்!
பாப்பாவின் பாட்டினிமை கேட்டு விட்டால்
பெற்றறியா மலடிகளும் அன்னையாவார்!

அடிமையில்லை, அடிமையில்லை
அடிமையில்லை
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோம்
என்றன்றே கூவி எமை
அழைத்து ஞானக்
கதிரொளியால் சுவைக்கடலைக்
கருத்திற் காய்ச்சி

கவியமுதம் மலைமலையாய்ச்
சமைத்த தேவன்.
கவிக் கோமான் பாரதியின்
நாமம் வாழ்க.
புவியெல்லாம் அவன் புகழை
அறியச் செய்வோம்
தமிழின் பெருமைக்கோர்
பெருமை சேர்ப்போம்

வான் கவிதைச் செல்வத்தை
உயிரின்பத்தை
வறுமை எனும் நெருப்பாலே
வாட்டிவிட்டோம்.
சூடிட்ட கனல் பட்டும்
சோர்வுக் கஞ்சான்
சுடச் சுடவே சுடர்கின்ற
சொக்கத் தங்கம்.

சிறப்பது போல் சிந்தனையில்
செம்மை சேர்த்து
அம்மையருள் பாரதியை
அல்லால் மற்று
யாதொன்றும் எண்ணுமல்
அன்னைக்கென்றே
மாதவத்தைச் செய்துவிட்டான்
மறையின் மன்னன்!

மொழியிலே உயிரையேற்றி,
உயிரிலே உணர்ச்சியேற்றி
உணர்ச்சியில் தேசாவேசத்
தத்துவங்காட்டி அந்தத்
தளபதி கவிதை செய்தான்
தமிழுக்கு உயிரை ஈந்தான்
தரணிக்குப் புதிய வேதம்
தமிழுக்கும் புதிய கீதம்!

பாரதியின் புகழென்னும்
சாகரத்தில்
பல கப்பல் ஓட்டுகிறோம்
சுதந்திரத்தின்
போருக்கு வீரத்தின்
விதிவகுத்த
தளபதி எம் தமிழ்க்கவியின்
நாமம் வாழ்க.

பாரதியின் பரம்பரைகாள்!
புலவர்காள்! புரவலர்காள்!
புறப்படையைச் சாடி எழும்,
புயவலிமை வேங்கையர்காள்!
பயமின்றி முழங்குங்கள்!
பாரத மா நாடென்று!
சிரந்தூக்கி முழக்குங்கள்,
சுதந்திர மா சக்தியென!

தந்திரியே யானாலும்
மந்திரியே யானாலும்
தைரியமாய்ச் சொல்லுங்கள்!
தேசபக்தி தேவையென!
கொத்தி நமைத் தின்னுகிற
கொலை கருப்பு வணிகருக்கும்
சத்தியமாய் நாட்டன்பு
தேவையெனக் கூறுங்கள்!

இங்கந்த வெங்கொடியன்
    இமயப் பேராசையினால்
பொங்குமிடி பீரங்கி
    புகைக்கின்றன, நம் வீரர்
சிங்கமெனப் பாய்கின்றார்,
    சத்தியப் போர்க்களமீது.
சங்காரம் செய்கின்றார்.
    ஜெயகாளி துணையுண்டு.

என்றுமுள இமயமலை
    எங்களது எல்லைமலை
இறைவனது இனியமலை
    இந்தியரின் இதயமலை
எழுகவோ ஜெயகாளி...
    எம்மன்னை எழுகநீ
எல்லையைக் காக்கவே,
    எழுகவோ ஜெயசக்தி!





## சிங்கநாதம் கேட்குது!

சிங்க நாதம் கேட்குது!
சீன நாகம் ஓடுது!
சுதந்திரத்தின் சக்தி வீர
சங்க நாதம் கேட்குது!
சீனன் வந்த போதிலும்
சிரமறுத்த போதிலும்,
சேனை கொண்டு செங்களத்தில்
சேர்ந்தெதிர்த்த போதிலும்! (சிங்)

ஈனமான அந்நியன்
இதய மீது தாக்கினான்
ஊனமிக்க சீனனை
ஓட்டவேணும் உறுதியாய்!
கட்சியில்லை, பேதமில்லை,
கொள்கை நூறு தேவையில்லை,
கட்சியற்ற ஒற்றுமை
காணவேண்டும் நிச்சயம்! (சிங்)

பாரதத்தின் வாழ்விலே
புதிய இந்த சோதனை!
கோரமான சீனன் தந்த
கொடுமையான வேதனை!
வீரம் என்ற சக்தியின்
விடுதலைக்கு சோதனை!
சீறியே ஜெயிக்க வேணும்
சத்தியத்தின் சாதனை! (சிங்)

தொல்லைதந்த சீனன் ஓட
தாக்குகின்ற தீரருக்கு,
எல்லை காக்கும் வீரருக்கு
எல்லையின்றி உதவுவோம்!
எல்லை காக்கும் போரிலே
ஈடுபட்ட தியாகிகள்
வல்ல தானசேனை நமது
வீரவேலி எண்ணுவீர்! (சிங்)

ஆண்களற்ற பூமியா
அன்னை நமது இந்தியா?
ஆண்மையற்ற சீனனின்
ஆணவத்தை வெல்லுவோம்!
பஞ்ச சீலம் ஏட்டிலே
பழைய நேசம் காற்றிலே
பஞ்சையான மஞ்சள் சீனன்
பாய்கிறான் நம் நாட்டிலே (சிங்)

இமயவான மலையை இன்று
    இரத்த வானமாக்கினான்!
அமைதி கொண்ட ஆலயத்தை
    அழிக்க வந்த பாதகன்.
புனித கங்கை பிரம்மநதியில்
    புலையன் காலை வைத்தனன்
பொறுப்பதில்லை போர்க்களத்தில்
    பாய்ந்து வெற்றி நாட்டுவோம் (சிங்)

எந்த நாட்டின் மீதிலும்
    எல்லை யற்ற அன்பினை!
எல்லையின்றி காட்டும் நமது
    எல்லை மீது பாய்கிறான்!
வந்தவர்க்கும் போனவர்க்கும்
    வாரி வாரி அன்பினைத்
தந்த நமது நாட்டை இன்று
    தானை கொண்டு தாக்கினான்! (சிங்)

சரித்திரத்தில் ரத்த ஏட்டை
    தீட்டி விட்ட சீனனே!
சீக்கிரத்தில் நீதி உன்னை
    தூக்கி லேற்றும் நிச்சயம்!
சாமதான பேத தண்டம்
    சமரிலே இறங்கினோம்
சத்தியம் ஜெயிக்கும் என்ற
    சங்கநாதம் கேட்குது! (சிங்)

அச்ச மென்ற வார்த்தையை
துச்ச மென்று தள்ளியே
எச்சரிக்கை செய்த எந்தை
இந்தியாவின் பாரதி! !
உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை என்று சொன்ன
அமரவாணி கேட்குதா? (சிங்)

புத்தர் காந்தி வீட்டிலே
பூஜை செய்யும் போதிலே
புகுந்த பூனை சீனமாம்
பேய்கள் அலறி விழுவே!
கால கால ஊழியில்
கலக்க மற்ற சூரியன்
ஞான பாரதத்தை சீன
நாகமென்ன செய்திடும்? (சிங்)

அன்னை ஒன்று தந்தை ஒன்று
என்ற உண்மை நம்பினால்
தேசம் ஒன்று தெய்வம் ஒன்று
இதில் உனக்கு ஐயமேன்?
தலைவன் ஒன்று கொடியும் ஒன்று
தம்பி அண்ணன் ஒன்றெனில்
தரணியாவும் இந்தியாவை
தலைவணங்கும் தெரியுமா? (சிங்)

# வீர வணக்கம்

வாணிபம் செய்யவந்தான்
வஞ்சவாள் தீட்டிவிட்டான்,
வீரத்தை விலைக்கு வாங்கும்
வியாபாரம் செய்யலானான்.
நாணின்றி சிலர் அலைந்தார்
நம்முடன் பிறந்த நோய்போல்
நச்செனும் பேடி மாக்கள்
நாட்டினைக் காட்டித் தந்தார்.

ஆணொடு பெண்கள் மக்கள்
ஆன்றநற் கிழவர் எல்லாம்
ஆடிய தோள் புடைத்தார்
அடல் பெரும் படைஎடுத்தார்,
மானத்தைக் காப்போம் இன்றேல்
மரணத்தில் வாழ்வோம் என்றார்!
மண்டலம் அதிர்ந்ததெங்கும்
முழங்கிற்று சங்கநாதம்.

எழுந்தது இரத்தவேட்டை
    இடிந்தது பகைவர் கோட்டை
எரிந்தது புரட்சிக்காடு
    எரிமலை வாய்பிளக்க,
விழுந்தது இடி இடித்து
    வெம்பகைக் கொடியன் மாண்டான்!
வெந்தணல் தீயில் வீழ்ந்து
    வெந்தனன் வேட்டுவைத்தோன்!

அழிந்தனன் போர்ப் பதுங்கி
    அந்தியில் வெற்றி பெற்றான்!
ஆண்மையால் அல்ல, அன்று
    ஆசையால் துரோகப் பேய்கள்
குழைந்தன வாலையாட்டிக்
    கொஞ்சின பகைவன்காலை.
அணைந்தது வீரம் அந்தோ
    அந்நியன் வலியன் ஆனான்!

உரங்குன்றி மக்கள் வாழ்வில்
    வாடினார் வெம்பி வீழ்ந்தார்,
உயிரற்ற பிணங்கள் போல
    உறங்கினர் அந்த வேளை
அருள்மிக்க திலகன் பின்னே
    அன்பெனும் ஒளியை ஏந்தி
இராமர்க்குப் பரதனேபோல்
    இங்குநம் அண்ணல்வந்தான்!

நாற்பது ஆண்டுக்காலம்
      நற்றவம் செய்தால் இந்த
நாற்பது கோடி மக்கள்
      நோய்க்கொரு மருந்தளித்தான்
தோற்பது இல்லை என்றுன்
      திகைத்தது தீயராட்சி,
திசையெலாம் அதிசயிக்கத்
      திறமிகு வெற்றி தந்தான்!

போர்ப்படை, பாவம், சூது
      பொய், கொலை மலிந்த மண்ணில்
புண்ணியன் புத்தனே போல்
      போதமாம் பண்ணைவைத்தான்.
பார்புகழ்ச் சித்தனுென்
      புவிஎலாம் நமது நாட்டின்
புதுப் புகழ் பேசவைத்தான்
      புதுமையிற் புதுமை கண்டான்.

தந்தையாய், தாயாய், ஞானத்
      தத்துவக் குருவாய், தெய்வத்
தந்திரத் துணைவராகி
      தேசுற்ற புதிய வாழ்வைத்
தந்தநம் ஆன்றோரெல்லாம்
      தீரமாய்ப் போர்க்களத்தில்
அந்த நாள் ஆவியீந்த
      ஆயிரங்கோடி வீரர்,

இந்த நாள் அமரரானுர்
இன்று நாம் அனுபவிக்கும்
இணையிலா உரிமைதந்தார்,
இன்பநல்வாழ்வு தந்தார்!
சொந்தமாய் ஆக்கிவைத்தார்
சமரிலே துடித்து மாண்டார்,
சோதரர் வீரவாழ்வைச்
சிந்தையால் வணங்குகின்ருேம்!

தூக்கிடும் சிறையே எங்கள்
திருமண மேடை என்ருர்
திருநாடு வாழ்கவென்ருர்
தொங்கினர் பிணமாய் ஆங்கே!
தாக்கினும் தளரா வீரன்
தாய் மணிக்கொடி எடுத்த
தமிழ் மகன் தலையை ஓங்கித்
தடியினுற் பிளந்து கொன்ருர்!

பச்சிளங் குருத்தைக் கிள்ளல்
பாவமென் றெண்ணும் நாட்டில்
பச்சிளம் பாலர் தம்மை
பெற்ற தாய் மடியின்மீதே
சாக்கொடுவாளால் வீசித்
தள்ளிய நீலன் போன்ற
சண்டாளர் செயலை அன்று
சாடிய வீரர் வாழ்க!

வாக்கறிவாளர் ஞான
    வள்ளல்கள் செயலின் வீரர்
வித்தகர் கவிஞர் எல்லாம்
    விலங்குபோல் செக்கிழுத்தார்
தேக்கிய முழுவீரத்தின்
    தேசத்து மாதரெல்லாம்
தேவி கண்ணகியைப்போலத்
    திமையைச் சபித்தெழுந்தார்!

சென்னை-600017
செய்தி-மக்கள் தொடர்பு

ஆக்கினர் அமரவேள்வி
    அகிலமே கிடுகிடுக்க.
அந்நியன் வேரறுக்க
    அவர் செய்த தியாகப் போரை
நாக்கிலே நரம்பில்லாத
    நீசர்தான் கேலிசெய்வார்
நெஞ்சிலே எண்ணிக் கண்ணீர்
    நிறைவுடன் வணங்குகின்றோம்.

தாயொடு தந்தை மக்கள்
    தாரமென்றிவர் பால்வைத்த
நேயத்தைக்கூட நாட்டின்
    நலனுக்குத் துறந்த வீரர்
சேவையை எண்ணுகின்றோம்
    சென்னியால் வணங்குகின்றோம்
சிந்தையின் கண்ணீர் மாலை
    திருவடி சூட்டுகின்றோம்.

# மரண நதி!

வெள்ளிக் கிழமையிலே
விளக்கேற்றும் மாலையிலே
அள்ளும் சுடர்சாந்த
அறவிளக்கு அணைந்ததடா!
இல்லையடா பெருஞ்சோதி
இவ்வுலகக் கோடிமக்கள்
உள்ளமெல்லாம் ஒளிகாட்ட
ஒருகூட்டை விட்டதடா!

வள்ளல் திருமேனி
வார்த்துவிட்ட இரத்தமழை
துள்ளிக் குதித்ததிலே
துடிக்குதடா தியாகநதி!
உள்ளத்துக் கண்ணீரால்
உறுமுதடா மரணநதி!
வெள்ளம் கரைபுரள
வேகுதடா மரணநதி!

ஆறாத் துயரமெலாம்
அழுகையிலே பொங்கியெழ,
மாறாத கீர்த்திமகான்
மலர்மேனி மண்வீழ,
நீறாகச் செய்துவிட்டோம்
நீங்கிடுமா அவமானம்!
சேறாகிப் போகமனம்
சோகஇடி கொட்டுதடா!

நேரமெலாம் பொன்செய்த
நவயுகத்துச் சிற்பி எங்கோ
தூரத்தே ஓடிவிட்டான்
துயர் அணுகாத் தூரமடா!
பூரணமா ஞானியரும்
பார்த்தறியாத் தூரமடா!
பாரெல்லா முயன்றாலும்
போய்ச் சேராத் தூரமடா!

வீரரெல்லாம் அடிபணியும்
வித்தகனை நம்தாயை,
மாறுபட்ட மதவெறியன்
மார்பினிலே சுட்டுவிட்டான்!
போராட்ட மில்லாத
பெருவெளியில் அவர்போக
நீரோட்ட மில்லாமல்
நிலம்வெடித்துச் சாயுதடா!

போச்சுதடா தெம்பிழந்துப்
புகையுதடா பூவுலகம்
மூச்சிருந்தும் பிணமாகும்
மாயநிலை வந்ததடா
கூச்சமிலாக் கொடுமகனின்
குண்டுபட்ட தாய்நெஞ்சம்
மாட்சியொடு பார்க்குதடா
"மகனேநீ எனைச்சுட்ட

உன்கைகள் நோகுமடா
உட்காரு களைப்பாறு
உன்கைநோய் தீரும்வரை
நான்மருந்து போடும்வரை

என்ஜீவன் நிற்குமடா
என்கண்ணே உனையீன்ற
உன்தாயின் பாசமடா
உத்தமனே உட்காரு"

எனக்கெஞ்சும் அம்மாவை
எத்தனைதான் சுட்டாலும்
அதன் பின்னும் "என்மகனே
ஆண்டவனே காப்பாற்று"
எனத்தேம்பி ஏங்கியழும்
இரக்கத்தின் மாதாவை,
மனிதவுடல் கொண்டஒரு
மதமிருகம் சுட்டதடா!

மண்ணுயிரே மங்குதடா!
மானிடமே ஏங்குதடா!
பெண்மணிகள் பேரழுகை
பொசுக்குதடா காதுகளை
கண்ணெல்லாம் கக்குதடா
கொடும்பழியின் இரத்தமழை;
என்றென்றும் எவ்வுயிர்க்கும்
எள்ளளவு தீமையையும்,

எண்ணத்திலும் செய்யா
என்னருமைச் செல்வத்தை,
இன்மொழியின் இதயத்தை
ஈகையென்னும் இமயத்தை
எண்ணத்தில் எதையெண்ணி
இழவுமகன் சுட்டுவிட்டான்?
சின்னமணிக் குழந்தையன்றோ
சீர்பெருகும் காந்திமகான்!!

குழந்தையைக் கூடவிந்தன்னைக்
குறிவைத்துச் சுட்டானு?
பழமான அவர் நெஞ்சைப்
பதம்பார்க்கச் சுட்டானு?
குழைவான பொன்னுடலைக்
கறிசமைக்கச் சுட்டானு?
இழவெடுத்த இவன்நாற்ற
உடல்பெற்ற தாய்எவளோ?

மரணம் புலம்புதடா
மானிடனைத் தூற்றுதடா
குணமற்ற மதவெறியா!
குமுதமலர் மோகனரின்
இரணைரத்தக் காட்சியிலே
நடுங்குதடா மரணநதி!
அணைஉடைந்த கொடுமையிலே
அலையுதடா மரணநதி!

அனுக்குண்டைச் செய்தவனும்
அண்ணல்ஒளி அறிவாலே,
மனம்மாறி யோசிக்கும்
மதிப்பான காலத்தே,
இனவெறியன் இரக்கமிலான்
இவர்மேனி சுட்டதனுல்
மனிதஉயிர் யாவையுமே
மாத்துயரம் சுட்டதடா!


வீரச் சிரிப்பாலே
ஒற்றுமையாம் மணம்வீசும்,
பேரறிவின் சாந்திமலர்
போச்சுதடா சாம்பலிலே,

சூறைச்சுழல் உலகைச்
செவ்வானம் ஆக்கிடுமோ?
சீறிக் கரைமுட்டும்
சுடுகாட்டு மரணநதி!

அணைகட்ட வேண்டுமடா
அலைமரண நதிக்கின்று!
சினங்கொண்ட மரணநதி
ஜெகமூழ்கப் பாயுமடா
மனம்மாறி மண்வெறியர்
மதவெறியாம் மலைவெட்டி
அணைகட்ட நிற்குமடா
அதிவேக மரணநதி!

உலகம் மறக்கமுடியாத 1948 ஜனவரி 30 வெள்ளி மாலையில் நடந்துவிட்ட சோக நிகழ்ச்சிக்குப்பின் பல நாட்கள் உணவின்றி நடுங்கிக்கொண்டிருந்த உள்ளத்தின் உயிர்வேதனை !

உடல் நிலையற்றது ! உயிர் உருவற்றது ! செயல் ஜெயம் பெற்றது ! இவைதான் சரித்திரத்தின் சுவடுகள் !



## உயர்ந்ததோ மனித ஜாதி?

என்னடா மனிதப் பூண்டே!
    என்னநீ செய்துவிட்டாய்?

எவரைநீ கொன்றுயப்பா?
    யாரை நீ மாய்த்துவிட்டாய்?

எதற்கிந்த மரணக் கூத்து?
    இதுதானோ? மனிதப் பண்பு?

இந்நில வுலகந்தன்னை
    இதயம்போல் பாதுகாத்த

இன்னருள் மன்னன் தன்னை
    இன்றுநீ கொன்றாய் அந்தோ?

பன்றிக்கும் நாய்க்குமுள்ள
    பெருமைசேர் நன்றிகூட

என்றைக்கும் மூடர்க்கில்லை
    என்பதோர் உண்மைதன்னை

கொன்று நீ காட்டினுயோ?
கொடுமையின் கொடுமையீதோ?

கொலேயினுல் நிலேகுலேந்து
கொட்டுது உலகம் கண்ணீர்!

கல்வாரிமேட்டில் அன்று
காருண்ய ஏசுமூர்த்தி

கருணேயின் இதயம்பட்ட
கட்டாணி சிலுவைமீது

கோரமாய் மனிதர் செய்த
கொலேப்பலி மிருக வேட்டை

கொடுமையின் இரத்த வேட்கை
குறையினும் தீரவில்லே!

கொடியது உலக மாந்தர்
கொள்கையோ கொடியதம்மா!

கீழ்த்திசை தீபம் எங்கள்
காந்தியின் ஜீவன் தன்னே

குடித்திட்ட கொலேயின் பேய்கள்
குறையவே இல்லேயந்தோ?

சமரச ஞானி லிங்கன்
சடலத்தைத் துளேத்த அந்த

சாக்கொடு கொள்ளிச் சாத்தான்
சந்ததி குறையவில்லே!

என்றதோர் உண்மைதன்னே
உலகுக்கு சொல்ல வோநீ

இன்னரும் தலைவன் தன்னை
இரக்கத்தைச் சுட்டாயப்பா!

இதயத்தின் சிலுவைமீது
ஈகையை மாய்த்துவிட்டாய்!

இணையிலா வீரன் தன்னை
ஈடிலாத் தலைவன் தன்னை

உலகெலாம் போற்றுகின்ற
உத்தமன் உயர்ந்தோர் அன்பன்

கென்னடி சிரத்தின் மீது
குறிவைத்துச் சுட்டபாவி

கண்ணடி கொடியதய்யோ
காலனும் கருகிவிட்டான்

கருணையைச் சுட்டுவிட்டான்
கொடியது மனித நன்றி!

கொடியது மனிதப் பண்பு
முடிந்ததோ மரணக்காட்டில்!

உளுத்தது மனித நீதி
உயர்ந்தது மிருக ஜாதி!

உயிர்க்கொலை கொள்ளும் ஜாதி!
உயர்ந்ததோ மனித ஜாதி!

மடிந்தத் தாய்மனைக் குப்பை
மாண்டதோ மதியின் வெப்பம்

நடந்தது கொலையே என்றால்
நடப்பது எதுவோ என்று

நடுங்குது உள்ளம் அந்தோ
நானிலம் நடுங்குதந்தோ.

கொடுமையில் நடுநடுங்கி
கொட்டுது உலகம் கண்ணீர்.

கொடியது மனிதஜாதி
கொலைவெறி கொடியதந்தோ!



# தேன் தமிழ்

சொக்கு மயில் ஒயில்கவிதை
சுப்பண்ணு தலைமையிலே

சுப்ரமண்ய பாரதிக்கு
செயபூசை செய்திடுவோம்.

சுக்கு மிளகு ரசம்
சுரக்காரன் நோய்தீர்க்கும்

சுப்ரமண்ய பாரதியோ
சீவர்களின் நோய்தீர்ப்பான்!

சஞ்சீவி கொண்டு வந்த
செயவீர மாருதிபோல்

அஞ்சாமை அமுதமழை
ஆக்கியவன் பாரதியே!

பாஞ்சாலி மானத்தைப்
பகடையிலே தோற்றுவிட்ட,

நோஞ்சான்கள் நெஞ்சதிர
நிசக்கவிதை தீட்டியவன்.

அந்நியரின் ஆட்சியிலே
ஆணடிமையாய்க் கிடந்த

அநியாய பாரதத்தின்
அவலமிகு விஷக்காட்டின்

அடிவேரில் ஆண்மையெனும்
அக்கினியை மூட்டிவிட்டு

அடிமைப் பேய் உயிர் சுட்ட
ஆண்கவி எம்பாரதியே!

ஆன்ற தமிழ்க் கவியரசன் ஆஸ்தானத்தை
அணிசெய்ய வந்துள்ள கவிச்செல்வங்காள்!

ஈன்ற தவத்தாய் எமது தெய்வ நாட்டை
எந்நாளும் காக்கின்ற இளஞ்சிங்கங்காள்!

தோன்றியெழும் தினம் புதிதாய் சூர்யஜோதி
திசையெங்கும் சுடர்கின்ற தன்மைபோல

சான்றோரின் சங்கம்போல் சத்தியம்போல்
தேச மகாகவிராசன் நாமம் வாழ்க.

* * *

சுப்ரமண்ய பாரதியார் என்ன செய்தார்?
எப்போதும் போல்தானே எழுதிவைத்தார்!
எனப் பேசும் படித்திட்ட பண்டிதர்க்கு
படிக்காத ஏழை ஒரு வார்த்தை சொல்வான்
கேளப்பா ஏட்டறிவுப் புலவனே கேள்.
பாரப்பா பண்டிதனே நன்றாகப் பார்.

அப்போதும் இம்மண்ணில் கலைகளுண்டு
அணி செய்யும் காவியமும் கோடி உண்டு

தப்பின்றிப் பாடுகிற புலவருண்டு
தடையின்றிப் பேசுகிற திருட்டருண்டு

ஒப்பற்ற மதவாதத் திமிருமுண்டு
உயிரான ஒன்றுமட்டும் ஆங்கே இல்லை

செப்பரிய சுதந்திரமாம் சோதியில்லை
சுடுகாட்டுப் பறவைபோல் விழித்த அந்நாள்

சுப்ரமண்ய பாரதியார் என்ற சோதி
செங்கதிராய் செந்தமிழின் சிகரந்தோன்றி

நற்புதுமை மின்சார ஒளிவெள்ளத்தை
நந்தமிழின் இனிமையிலே சேர்த்தனுங்கு

வில்லுதைத்து கணைப்போதில் இலக்கைத்தாக்கும்
வானவெளிவிசைகள்எனக் கவிகள்கொட்டிக்

கொல்லுவித்த கொடுமையெனுமடிமைப்பேயின்
குற்றுயிருமிற்றுவிழப் போர்தொடுத்தான்.

பாரதமா தேவியின் கைப்பிணி விலங்கை
பார்த்தவனும் பதறினான் கலைமானென்று

பேரதிர்ச்சி கொண்டோடிப் புலியைத்தாக்கும்
புதுவீரம் கொண்டதென உணர்ச்சிமானம்

பாரெங்கும் பெருக்கினான் பயந்துச் செத்தார்
பந்தத்திற்கட்டுண்ட பேடிக்கும்பல்

பரதேசி வாழ்கவெனும் பொய்யர்கூட்டம்
பிணந்தின்னும் பேய்மனிதப் புலையர்கூட்டம்

உடலழகைவிற்றுண்ட விலைமாதைப்போல்
அறிவழகை விற்றுண்ட அசடர்கூட்டம்

கடலெழுந்து பொங்கிடினும் கவலையின்றிக்
காசுக்கே பூசையிடு கயவர் கூட்டம்

மடல் வாழ்த்து மதுபானம் மங்கையன்றி
மற்றெதுவுமறியாத மன்னர் கூட்டம்

குடல் வெந்து குலை நொந்து கூம்பிக் காய்ந்த
குடிமக்கள் கொடியநிலை அவலங்கண்டு·

மனமுடைந்து மாகாளி தனைக்கும்பிட்டான்
மதிகெட்ட மண்ணுந்தை மக்கள்தம்மை,

மனிதகுல மணிகளென மாற்றப்பார்த்தான்
கணந்தோறும் கணந்தோறும் அடிமைஎன்ற

கொடுங் கூற்றைச்சாடினன் உயிர்வெள்ளத்தை
மனச்சோலை செழிப்பாக பாய்ச்சிவிட்டான்

மறைத்தமிழின் வழிவந்த மாண்கவிஞன்
மார்தட்டி நம்மானம் காத்தவீரன்!

வள்ளுவனை இளங்கோவை கம்பன்தன்னை
வையகமே வணங்குவகை செய்வீரென்று

கிள்ளை மனப்பிள்ளைகளே நாமா சொன்னோம்?
கோமான்எம் பாரதியே குரல்கொடுத்தான்!

கள்ளமறக் கர்ஜித்தான் காலஊழிக்
கனலையும் வெல்லுவதெம் தமிழேஎன்றான்

சொல்லதிகம் தெரிந்தபெரும் போதையாலே
சொக்கட்டான் ஆடாதே சகுனிபோலே

வல்லமை சேர் செந்தமிழை சிறை செய்யாதே
வளர்கின்ற தமிழோடு வாழவாவா

உள்ளதெலாம் தமிழினிலே கொண்டுவந்து
உயர்தமிழை உணர்ந்துபின் உய்கநாடு

தென்னூற்ற திறல் யாவும் சேரக் காண்போம்
தீரர்கள் திருவினையை ஆக்கக்காண்போம்

வெல்லுமுயர் பன்மொழியின் சோலைதன்னில்
வான்மறையின் தேன்தமிழே வாழ்க
என்போம்!

## எச்சரிக்கை!

ஓரடி நிலத்துக்காக
    ஓங்குவான் கொடுவாள் தன்னை
பாரடா பூமி எங்கள்
    பாட்டனின் செல்வமென்பான்,
கூறடா நியாயமின்றேல்
    கொடுத்திடு தலையை என்னும்—
வீறுயர் மக்கள் வாழும்
    உரிமைசேர் பரத நாட்டில்,
ஊரெல்லாம் கொள்ளையிட்டு
    உயிரெல்லாம் கொன்றுவிட்டு
போரென்று வந்துவிட்டான்
    பொறுப்பதோ ஆண்கள் நாமும்!
பாரத சுதந்திரத்தைப்
    படைப்பதோ சீனன் காலில்!
பாரினில் மானமொன்றே
    பெரியது மனிதருக்கு!



F—6

சுதந்திரம் என்ற செல்வம்
சும்மாவா வந்ததிங்கு?
சேட்டுகள் வாங்கும் வட்டிச்
சரக்கல்ல வீரச் செல்வம்.
சொ ரூப ராணி அன்னை
கஸ்தூரி வள்ளியம்மை,
குமரனைப் பெற்ற தேவி
குலவீரத் தாய்மேல் ஆணை!

சொக்கிள பகவத் சிங்கம்
தனையீன்ற தந்தை தாயின்
சுட்டிடும் கண்ணீர் ஆணை!
சுதந்திரம் தியாகச் செல்வம்!
சுகத்துக்கே அவதரித்து
சுகமெல்லாம் சுட்டெரித்து
ஜீவனை ஈந்த எங்கள்
நேதாஜி உயிரின் ஆணை!



வீரங்கள் விளைந்த நாட்டில்
விடுதலை வேள்விக்காக
வேதனை யாவும் தேடி
வருவித்துக்கொண்ட வீரன்
வான்சுடர் திலக தேவன்
திருவடி மலர்மேல் ஆணை!
தோட்டத்துக் கீரையல்ல
சுதந்திரம் வானச் செல்வம்.

தீரர்கள் ரத்த வெள்ள
வயலிலே விளைந்த ஜீவன்!
தத்துவ அறிஞர் தீட்டும்
தருக்க நூல் அல்ல, இந்த
தேசத்தின் தியாக வேதம்
சத்திய சமரின் கீதம்!
அதற்கின்று ஆபத்தென்றால்
அடக்கமாய் இருக்கலாமோ?



அன்னையே பிச்சை வாங்க
அருவிருந் துண்ணலாமா?
சாக்காடு துரத்தும்போது
சந்தனம் பூசலாமோ?
செல்வமும் சுகமும் தேடி
சுதந்திரம் இழக்கலாமோ?
குழந்தைகள் அழுகை கேட்டும்
குறட்டையில் தூங்கலாமா?

சுதந்திரப் போரின் வெற்றிச்
சரித்திரம் அறியாப் பேய்கள்
சுயநலத் துரோகக் கும்பல்
சோம்பேறிக் கடையரெல்லாம்
சிரிக்கின்றார் என்றும் போல
சங்கீதம் கேட்கின்றார்கள்
ஐயகோ காளி சக்தி
அழித்திடு இவரையெல்லாம்!



சீறுகிறான் சீனயமன்
 செம்பாம்புக் கொடியுடையோன்
யாருமில்லா வீடென்று
 இம்மண்ணில் அடிவைத்தான்?
போரில்லா போரென்று
 பிதற்றுகிறான் பழிகாரன்
யாரிடத்தில் விளையாட்டு
 எச்சரிக்கை வீரர்களே!

பசிகொண்ட செந்நாகம்
 பாய்கிறது எல்லையிலே!
ருசிகண்டால் விடமாட்டான்
 இரத்தவெறி மிருகமவன்!
விசை கொண்ட பக்கபலம்
 அதை நம்பி வருகின்றான்
திசை எங்கும் நம்பக்கம்
 தாக்குங்கள் எதிரிகளை!



தருமத்தின் வாழ்வதனை
கௌவுகிறான் நம்நாட்டின்
மருமத்தை அறியாதான்
மண்டை வெறி மூண்டுவிட்ட
கருமத்தால் மதிகெட்டு
கள்ளுண்ட குரங்கானான்!
குரங்கின் கைப்பாம்பாகும்
கொலை வெறியன் ஆயுதங்கள்;

அவனழியும் வரையில் கொலை
ஆயுதத்தை விடமாட்டான்!
கவனமின்றி நாமிருந்தால்
காரியங்கள் மிஞ்சிவிடும்;
புவனமெல்லாம் போற்றிடவே
புது வீரம் பெற்றெழுவோம்!
சிவனறிய உண்மையிது
சத்தியமே வெல்லுவது!



எந்நாட்டு மண்மீதும்
எப்போதும் ஆசையில்லா
பொன்னாட்டு மக்கள் நமை
போர்க்கின்று தூண்டுகிறான்!
செந்நாகச் சிறுகுட்டி
சிங்கத்தைச் சீறுதல்போல்
நன்னோக்கமில்லாத
நரிச் சீனன் பாய்கின்றான்!

அன்புக்கு அடிபணிவோம்,
ஆருயிரும் பலிதருவோம்
பண்புக்கு மரியாதை
பாரதத்தில் பஞ்சமில்லை
வம்புக்கு வந்திங்கு
வாலாட்டும் விலங்குகளைக்
கும்பிட்டுக் கொடிகாட்டும்
கோழைகளா நாமெல்லாம்?



வெம்போரின் களங்கண்ட
    வீரர்களின் வெற்றிக்கு
வம்பேதும் செய்கின்ற
    வீணர்களை நீர்கண்டால்
செம்புருக்கும் தீயினிலே
    சுட்டெரித்து முடியுங்கள்.
சோம்பேறிப் பேச்சர்களை
    செவியறுத்துப் போடுங்கள்.

வண்ணத்திரு நாட்டை
    வாழ்வுதரும் தவநாட்டை
எண்ணத்தில் எதை எண்ணி
    இங்கு வந்து எதிர்க்கின்றான்?,
உண்ணுதற்குத் தீனியற்ற
    ஒட்டாண்டிச் சீனர்களை
என்னருமை பாரதத்தில் ·
    ஏவுகிறான் சூ என் லாய்!



என் னாட்டின் உயிர் கொன்று
    உன்னாட்டை ஊட்டுகிற
தன்னலமாம் தீமைக்கோ
    சமதருமம் என்று பெயர்?
செந்நிறத்துப் பொதுவுடைமை
    சிங்காரம் இதுவானால்
சின்னமதிச் சீனர்களே!
    சேர்ந்தழிவீர் எச்சரிக்கை!



## காலத்தின் எல்லையிலே...

எத்தனையோ நலம் செய்தான்
    எண்ணியதைச் சொல்லுகிறேம்.
பத்திரிகை உலகத்தில்
    பெருஞ்சோதி, பெருங்கதையின்
தத்துவத்தின் வித்தையிலே,
    தனிமன்னன் தமிழ்ச்செல்வன்
சித்தமெனும் வானத்தில்
    சுற்றிவரும் தாரகையான்!

சத்தியத்தின் சோதனையில்
    சக்திமிகு சிறுகதைகள்!
சத்தான அரசியலாம்
    சாகரத்தில் முத்தெடுத்து
முத்தாரம் புனைந்துதமிழ்
    மேனியெலாம் அணிசெய்தான்.
வித்தாரச் சிங்கார
    விளக்கத்தில் வல்லாளன்!

எண்ணம் பலகோடி
    வண்ணக் கலைவயிலே
என்றைக்கும், எல்லோர்க்கும்
    இதயத்தில் தெம்பூட்டும்
தித்திக்கும் படியான
    திறனுடைய கதைகளிலே
உத்திபல நாட்டி
    உலகத்தை அதிர்காட்டி

சித்திபல பெற்ற
    செந்தமிழின் செல்வமகன்
ஜெயங்கொண்ட படைவீரன்
    சென்றுவிட்டான் வெகுதூரம்!
இலக்கியமாம் பெருங்களத்தில்
    இணையற்ற போர்வீரன்
பரணிபுகழ் பாடுமுன்பே
    படைவீரன் போய்விட்டான்

பண்பாதி முடியாமல்
    பாடகனே போய்விட்டான்
வீணைவிட்டு எழுந்திருந்து
    விண்சென்ற நாதத்தை
வேய்ங்குழலின் கீதத்தை
    வனமெல்லாம் தேடுகிறோம்!
மோனச் சிறகடிக்கும்
    மோகனமாம் கீதத்தை

காலத்தின் நற்சுவையை
கலைமணியைப் பொன்குயிலை,
காலமெனும் வானத்தே
காணாமல் தேடுகிறோம்
காவிரியின் வெள்ளத்தில்
கலைஞான அன்னத்தை
காலத்தின் எல்லையிலே
காணாமல் தேடுகிறோம்!



## சேமநிதி

இராகம்: செஞ்சுருட்டி. தாளம். ஆதி

வீணே செலவு செய்யக் கூடா தண்ணே.
போனால் பணம் திரும்பி வாரா தண்ணே. (வீ)

எண்ணி எண்ணிப் பணத்தைப் பார்ப்பாய் அண்ணே
கண்ணும் கருத்துடனே சேர்ப்பாய் அண்ணே. (வீ)

மண்ணில் பணமில்லையேல் மாண்பில்லையே.
முன்னும் பின்னும் எண்ணம் நண்ணும் நலம்
பெறவே (வீ)

ஒண்ணும் ஒண்ணும் சேர்ந்தால் ரெண்டாகுமே
என்னும் கணக்கறிந்தும் இந்நாள் நீ என்ன
செய்தாய் (வீ)

சின்ன எறும்பும் தீனி சேமிக்குமே—நல்ல
எண்ணமுள்ள மனிதன் தன்னைக் காத்துக்
கொள்ளவே (வீ)

அண்ணன்தம்பியானாலும் வாயும் வயிறும்வேறு
அன்னையானாலும் இதில் அயல் அல்லவோ
பொன்னும் பொருளும் என்ற பேதம் இருக்கும்வரை
உன்னை வருத்திக்கொண்டதால் வந்த பணந்
தன்னை (வீ)

விருத்தம். இராகம்—குந்தலவராளி

பொல்லாத உலகத்தில்
பணநாதன் இல்லையெனில்
தள்ளாத காலத்தில்
தளர்வுற்ற நேரத்தில்
தடிக்கம்பு வாங்கிடவும்
தம்படியோ கிடைக்காது
துடித்தாலும் அழுதாலும்
துதித்தாலும் வைதாலும்
ஒருக்காசும் பெயராது
உலகத்தின் இயற்கையிது
இருக்கையிலே ரெண்டு பணம்
இறுக்கிப் பிடித்தால்தான்
வெளுக்கையிலே உன்தலையும்
வெட்கத்தால் குனியாமல்
உயிரோடு நிமிர்ந்திந்த
உலகத்தைக் காணுமண்ணே!
தெரிஞ்சவனே நல்லவனே
திடமுடனே நீ வாழ
தெரியாமல் எவருக்கும்
தினந்தினமும் ஒருபணமாய்

சேர்த்து வைத்தால் அதுநாளை
சேமநிதி யாகுமண்ணே

வீட்டைத் தேடிவரும்
உதவியாம் சேமநிதி

உன்திண்ணை தேடிவந்து
உணவூட்டும் உண்மையிது!

நல்லதெல்லாம் செய்துவரும்
நம்முடைய வாழ்வுக்கு

அல்லல் தீர்க்கவொரு
ஆபத்து சம்பத்தாம்

சேர்த்தாலே நாள்தோறும்
சேமநிதி சஞ்சீவி

தாத்தாக் களெல்லாம்
தனபாலன் ஆக்குமண்ணே (வீ)

## சிரிக்கும் காதல்

மோட்டாருக்கு பேட்டரி போல
மனசுக்கு வேணும் காதல்
மாட்டை ஓட்டும் சாட்டைபோல
மனுசனே ஆட்டுது காதல்
ஆட்டம்போட பாட்டும்வேணும்
அவசியமானது காதல்
பாட்டன் பாட்டியின் பரிகாசத்தில்
பல்லைக் காட்டுது காதல்!

வட்டியில்லாமல் வாங்கிய கடனே
வாழ்வில் காதல் காதல்
இஷ்டப்பட்டே இருவரும் ஒன்றாய்க்
கஷ்டப்படுவது காதல்!
கண்ணும் கண்ணும் கௌவியதாலே
கண்குருடானது காதல்
மண்ணும் விண்ணும் முதலுமுடிவும்
மோகனமானது காதல்.

## காதலர் கூற்று

கருங்குவளை விழிஉமிழும் கணப்பினாலே
கருவாளைக் காதலன் கரையவேண்டும்
இருவருமே இதயத்தை இழப்பதாலே
இறுக்குமொரு கயிறாக இணையவேண்டும்
பெருக்கான பேரின்பம் மோதலாலே
பொறுக்காத புதுஊடல் புகையவேண்டும்
பருக்காதல் பிஞ்சிலே பழுத்ததாலே
பசிக்காத போதிலும் புசிக்கவேண்டும்
முறுக்கான இரகசியம் முறிந்ததாலே
முழுக்கள்ள ராயவர் முழிக்கவேண்டும்
சருக்கி விளையாடுகையில் சாயுங்காலம்
சரக்கொன்னைப் பூங்குயில் பேசவேண்டும்
வரப்புயரும் வயல்காடு வனத்திலெல்லாம்
வளருமாம் இவர்மூடு மந்திரங்கள்
உரப்புள்ள உடலின்ப விருப்பதாலே
இறப்புலகம் அறியாத இளமைவேண்டும்

97+48 =145

இலையற்ற கவிதைக்கு எவர்க்குவேண்டும்?
கவியென்று சொன்னாலே காதல்வேண்டும்!
சுவைகண்ட சொக்களின் சோரக்காதல்
கவியெனில் காசுக்கும் கனிசமாய் வாங்கலாம்
காதல்கடைவைத்தால் கைநிறைய அச்சாரம்
கனவீரம் எழுதினால் அதுவுமது கிரகசாரம்
கூதல்மழைக்குளிரில் குடிக்காத சாராயம்
கோடையிலே கொட்டினால் யாருக்கு உபகாரம்?
புல்லரிக்கும் காதலுக்கு போடுவோம் முத்தாரம்
கல்லுருக்கும் கவிஎதுக்கு காசில்லா வித்தாரம்
சில்லரைகளில்லாமல் செல்லுமோ சொல்லாரம்
நல்லபசிக்கோ நற்காதல் பணியாரம்!

## கானல்

எட்டினமட்டும் எங்கும் வெப்பம்
பட்டதுகானகம் பற்றியதாலே
விட்டதுகூவல் வீட்டுச்சேவல்
கொட்டியகோடைக் கொடியதுகானல்!

வற்றியதாலே வளமாநதிகள்
பற்றியசோலை பாலைமரங்கள்
சுற்றியநரிகள் சூறைச்சுடலை
முற்றியவேனில் மூண்டதுகானல்!


வட்டிக்கடனால் வாடியஏழை
கட்டிக்கையைக் கண்ணீர்விடுவான்!
பட்டிக்குழசை பசுவும் கன்றும்
கொட்டியதுயிரை கொள்ளைக்கானல்!

தங்கக்கடலோ தாவும்மலையோ
எங்கும்வேகும் எரிமலையாவும்
செங்கற்சூளை சேர்ந்ததுவானில்
மங்கக்கண்கள் மாய்க்குதுகானல்!

தோழன்வைத்த துரோகத்தீயின்
ஆழங்கண்டோன் அநியாயம்போல்
சூழும்துயரும் சோரும்உயிரும்
வாழச்சகியா வறுமைக்கானல்!

இத்துயரான எரியும்காட்டை
கத்திக்காயும் கலைமான்கண்டது
சுத்தத்தண்ணீர் சூழும்புனல்என
சித்தத்தெண்ணிச் சீறிப்பாயுது!

மாறும்மீளும் மாயும்பாவம்
ஆனால்அந்தோ அதிசயமாந்தர்
நானாவிதமாய் நம்பிச்செத்துப்
போனார்எங்கோ பொய்மைக்கானல்!



## இட்லி சுப்பன்

இட்லியை எண்ணிடும் வேளையிலே—ஒரு
இனிமை ஜெனிக்குது காலையிலே—தேங்காய்
சட்னி எனச்சொலும் நாதத்திலே—கார
சாரம் பிறக்குது நாக்கினிலே

உளுந்து கிடைக்காத தொல்லையினால்—தின்ற
உப்பில்லா சப்பாத்தி அல்லலில்லே—இன்று
அளந்து தருகின்ற ஆக்டிங் அரிசியால்
ஆறேழு இட்லிக்கு மோசமில்லே.

எள்ளுப் பொடிஇன்ப சாரத்திலே—மனம்
கொள்ளை கொள்ளும் இளங்காரத்திலே—உள்ளே
தள்ளுகின்ற அலங் காரத்திலே—அவை
அள்ளுகின்ற பசிவீரத்திலே (இ)

(விருத்தம்)

யாமறிந்த உணவுகளில் இட்லியைப்போல்
இனிதாவ தெங்கும் காணோம்
தேமதுரச் சுவைகாணு ஜாங்கிரிகள்
பதிர்பேணி பாதம்அல்வா
நாமமது ஸ்வீட்டென்று நம்மை ஏய்த்து
நாக்குகளை அறுப்பதனால் என்ன லாபம்?
சேமமுறசிற்றுண்டி செழிக்க வேண்டில்
சேர்ந்தெல்லாம் இட்லிகளை ஆதரிப்போம்.

(கோரஸ்)

இட்லி இட்லி இட்லி யென்று
    எட்டுமுரசு கொட்டுவோம்
சட்னியென்னும் சக்தியோடு
    சாம்பாருடன் தட்டுவோம்.

சுற்றிநல்ல எண்ணெய்யூட
    சூட்டுடனே தள்ளுவோம்
வெற்றி இட்லி வெற்றி என்று
    வீரமுரசு கொட்டுவோம்.

தோசை பாகவதர் பாடல்

தோசையிலே உள்ள தூய்மையைக் காணுமல்
    தீவிரமாய்ப்பாடும் சுப்பர்களே—இட்லி
ஆசையினுல் எங்கள் அதிரசதோசையை
    அவமதிப்பாக்குதல் அழகல்லவே

ஓசைநயம்துள்ள ஊற்றியதும்கல்லில்
    ஓடி உருகிடும் ஊக்கமிகும்
வாசமுடன்வெந்து வாயினில் வீழ்ந்திடும்
    வட்டமாம் தோசையை வாழ்த்திடுவீர்

உண்மையில் ஹோட்டலில் உயர்ந்தவர்கேட்பது
    உன்னதமானது தோசையன்றோ
வேண்டுமெனில் இந்த தோசையின் லீலையை
    ஓதும் வனஸ்பதியே சாட்சி.

★

## ஏனின்னும் எழுதுகிறான்?

"காசில்லாக் கவிராயா
    கண் திறந்து உலகைக்காண்

கவிதையினி எழுதாதே
    கடன்பட்டுச் சாகாதே

காசுக்கடை வைக்கும்
    கள்ளவட்டிச் சந்தையிலே

கவிதைக் கடைவைக்க
        கட்டிடமோ ஈங்கில்லை.

கவிதை கவிதையென
    காலமெல்லாம் கதறிவிட்டு

காலன் கதவிடிக்கும்
    கடைமூடும் திருநாளில்

காச நோய் உன்நெஞ்சைக்
    கத்தரிக்கும் வேளையிலே

ஊசலிடும் உயிர்ச்சோதி
    உடல் விட்டு ஏகாமல்

ஆசைக் குலை நடுங்க
    அனலால் உடல் கருக

நேசக் கிளி மனைவி
நெஞ்சம் வெடித்தலற
பாசத்தின் தெய்வத்தாய்
பெற்றஉயிர் பற்றிவிழ
நீசக் குணமுடையார்
நின்னைக் கேலிசெய்ய
தேசபக்தர் திருக்கூட்டம்
தெருவிலே பிரார்த்திக்க
வைத்தியனோ வரவில்லை
வாடகைக்கு வக்கில்லை
வந்தவர்கள் குந்த ஒரு
ஒற்றைச்சாண் நிழலில்லை
கருமீசைக் கடன் காரன்
கதவை இடிக்கையிலே
கருகிவிட்ட கவியுள்ளக்
கரித்துண்டுப் பொடியாக
ஓசிக் கவிதைக்கு
ஓட்டாண்டிப் பத்திரிக்கை
ஆசிரியக் கொக் கொருவன்
அங்கு வந்த வேளையிலே,
வாழ்வின் கவிபாட
வார்த்தைகளைத் தேடுகிறாய்!
வறண்டுவிட்ட உதடுகளில்
வார்த்தைவந்து நின்றுவிட
வாடிவிட்ட விழியோரம்
வண்டல் கவி படிய
நாத உருவாகாத
நற்கவிதை உன் நெஞ்சின்

கீதக் கடல் அடைக்கக்
கவியின் கதை முடிய

வானத்திலோ அன்றி
வறுமைநோய் எல்லையிலோ,

எங்கே போய் அடக்கியதோ
ஏக்கத்தின் பெருமூச்சு...?

இறுதியிலே எமன்பாடும்
இக்கவிதை கேட்டதனால்

இதயம் வெடித்ததனால்
இவ்வுண்மை சொல்லுகிறேன்

"சீச்சீ கவி எழுதி
சிறுமையிலே சாகாதே

யாருக்கு இனி வேண்டும்
ஏழை உயிர் இன்கவிதை

பாடுவதும் பிழைப்பாமோ
பிழையன்றோ இவ்வுலகில்

பிழைக்கும் வழி எத்தனையோ
பொய் வழிகள் ஆயிரமாம்

கள்ளச் சாராயத்தைக்
காய்ச்சுகிற குள்ளமகன்

கோடிபணம் சேர்க்கின்றான்
குணவள்ளல் ஆகின்றான்!

கூடிவிட்ட திரவியத்தால்
கொடிகட்டிப் பாராளும்

கோமானும் தானாகி
குறும்புபல செய்கின்றான்

உயிரெழுத்து மெய்யெழுத்து
ஓரெழுத்து மறியாமல்

கலையெழுத்துச் சாதகத்தால்
இவ்வுலகில் வெல்கின்ற

தாண்டவனார் சந்ததியிலே
தமிழ்க்கவிதை விற்பதுயார்?

கோணல் இங்கிலீஷ் பேசும்
குண்டுமகள் கூனியவள்

கணவர்களை விட்டுவிட்ட
கனமான தியாகியவள்

ஆறுபத்து வயதினிலே
அறுதாலி கட்டியவள்

ஓரக்கண் பார்வையிலே
ஊர்புகழும் கண்ணகியாய்

உயர்ந்தவர்கள் பாராட்ட
உலகுபுகழ் கலைமகளாய்

உயரப் பறக்கின்றாள்
உண்மையிதும் கற்பனையோ!

ஏலே கவிப்பயலே
இவ்வுலகில் உன்கவிக்கு

இடம் எங்கே இந்நாட்டில்
இன்பச் சமதருமம்

ஏலுமோ சொல்லிவிடு
என்செய்யும் உன்கவிதை?

பாலைவன வெய்யிலிலே
பற்றுகிற வேளையிலே

பசுங்கவிதை பாடிவிட்டால்
பயிர்கள் தழைத்திடுமா!

சதையழகில் அழிகின்ற
சரசமனக் கலையுலகில்

சுக்கான உன் கவிதைச்
சரக்குக்கு ஏதுவிலே?
ஆதலினல் அன்புடனே
அடியேன்நான் சொல்லுவதை
ஆவேச புத்திவிட்டு
அறிவுடனே கேள்" என்றன்.
"கவிதை எழுதாதே
கடன்பட்டுச் சாகாதே
தமிழில் எழுதாதே
தடுமாறிப் போகாதே
கல்விக் கலையாவும்
காசுபண விபசாரம்
ஆகிவிட்ட கலிகாலம்
ஆதலினல் கவி வேண்டாம்
பைந்தமிழி தூங்குகிருள்
பணக்காரன் அறையினிலே
பாடிநீ எழுப்பாதே
பதமாகத் தூங்கட்டும்
பகலில் எழுந்தறியாள்
பேரிரவு ராணியவள்
பெருந்தூக்கக் காரியவள்
பணக்காரி அவளுக்குப்
பூபாளம் கேட்காது
புதுவிறலித் தூதறிவாள்!
இத்தகைய இக்கட்டை
எதற்கோ நீ பாடுகிருய்?
ஏதாவதொரு தொழிலே
ஏற்றமுடன் செய்து பிழை

கவிதை எழுதாதே
    கண் கலங்கிச் சாகாதே"

என்றெல்லாம் சொல்லிவிட்டு
    எழுதிவிட்டான் இக்கவியை

ஏழைக் கவிராயன்
    ஏக்கத்து மாமன்னன்

ஏனின்னும் எழுதுகிறான்
    என்பதுதான் புரியவில்லை

இன்றல்ல நேற்றல்ல
    என்றென்றும் எழுதுகிறான்

இனிமேலும் எழுதிடுவான்
    இதுதான் விதிபோலும்

ஏனின்னும் எழுதுகிறான்
    என்பதுதான் புரியவில்லை...!

# வினோபா

அதிகாரம் அகங்கார ஆதிக்கத்தை
அதிமாயை என்கின்ற அன்பின் மேலோன்
விதிஎன்று ஏய்க்கின்ற வேற்றுமைப் பேய்
விதமான ஜாதிமதம் வென்றவீரன்

சதிசெய்யும் அரசியலாம் சகதிவிட்டுச்
சேவையெனும் சாரத்தைக்கண்ட மெய்யோன்
கதியற்ற ஏழைக்குக் கருணை வள்ளல்
காலமழை கொண்டுவரும் காற்றைப்போன்றோன்

காந்திவழி விட்டுநெறி கெட்டுப்போனார்
கல்நெஞ்ச வஞ்சமெலாம் கருகிப்போக
சாந்தமுடன் சத்தியமாம் துணையைநம்பி
சஞ்சலமாய் ஏழைமகன் ஜீவன் வெம்பி,

ஏந்தியகை கும்பிட்டுப் பிச்சை கேட்கும்
இந்தியனின் நிலைகண்டு இதயம்விம்மி
காய்ந்திட்ட மனித மனக்காட்டையின்று
காருண்ய ஊற்றாக்கும் கங்கைபோல்வான்

ஓய்ந்திட்ட உயிர்கட்கு உறுதிஊட்ட
ஊரெல்லாம் சுற்றிவரும் தந்தை பாவே
பாய்ந்திட்ட வறுமையெனும் இருளை நீக்கும்
பேரொளியின் பொற்சுடராம் பாவே வாழ்க

படைவீரர் பயங்கொள்ளும் பாகிஸ்தானில்
புது ஒளியின் பிறைநிலவாய் உலவிவந்தான்!
சாய்ந்திட்ட சமுதாயப் பிணிக்கு ஞான
சக்திஎனும் மருந்தூட்டும் சித்தன் பாவே!

ஆய்ந்திட்ட அரசியலும் அறிவும் வாழ்வும்
அண்ணலிவன் வழிபற்றி நடந்துவிட்டால்
அமரம்கா வாழ்விங்கு ஓங்கும் எங்கும்
அச்சமற்ற நல்வாழ்வு அமைதி பொங்கும்.



## பட்டணம்

ஓய்வில்லாத பட்டணத்திலே
ஒரே கொண்டாட்டம் – அந்த
கொண்டாட்டத்திலே
ஏழைபாடு திண்டாட்டம்
பளபளன்னு பாயுது பார்
பாலத்திலே புகைரயில்–அதில்
பயணமாகும் பிரயாணியின்
பயந்த முகம் தெரியுது
பறபறன்னு பறக்குது பார்
புதிய ஜெட்டு ஏரோப்பிளேன் – அதில்
புறப்படுற மனுஷனுக்கு
பெரிய மாலே போடுகிறார்!
பங்களாவை சுத்திப்பாரு
பூஞ்செடிகள் ஆடுது–அந்த
ட ்கத்திலே நல்லா பாரு
பழைய குடிசை நாறுது!



11

கோயிலிருக்குது குளமிருக்குது
    கோடிகோடி கலையிருக்குது
காவேரிகங்கை ஓடுது—கருணை கொண்டு
    அஞ்சி ஊத்தநாதியில்லையே
காணக்காண கண்பறிக்குது
    கள்ள நோட்டுக் கனமிருக்குது
காந்திமகான் பிறந்தநாட்டிலே ஓ வீரர்களே!
    கருப்பு மார்க்கெட் கழுதைமேயுது
சீறும்பசி சிவந்த நெருப்புங்கோ—அது
    ஜெகத்தைகூட முழுங்க பாக்குங்க
சீக்கிரமா முடிவு தேடுங்க இல்லாப்போனா
    சிரமம் ரொம்ப மீறிப்போகுங்க.

## எங்கே சென்றாய்?

பட்டத்துப் போர்யானை பவனி வந்து
    பாதையிலே புதைமணலில் வீழ்ந்ததேபோல்
பட்டணத்தை நீ பெரிதும் நம்பிவந்தாய்
    பணந்தின்னும் படத்தொழிலைக் காண வந்தாய்
கட்டிவைத்த பணப்பையைப் பிரித்துவிட்டாய்
    காக்கைகளின் கூட்டத்தில் கொட்டிவிட்டாய்
கட்டு மாங்கனியான கவிகள் தந்தாய்
    கடை வைத்தாய் காலன்முன் கட்டிவிட்டாய்!

செந்தமிழின் கவிக் காட்டில் நிகரில்லாத
    சிங்கமென வாழ்ந்த நீ சென்னைவந்தாய்
சிந்தையிலா இருட்கூட்டில் விளக்கு வைத்து
    செவ்வொளியை காணலாம் என்று வந்தாய்
சந்தியிலே ஊளையிடும் நரிகள் முன்னே
    சாரமிகும் தமிழ்வீணை மீட்ட வந்தாய்
சந்தையிலும் சங்கீதம் கேட்க வந்தாய்
    சரிப்பட்டு வரவில்லை சாய்ந்துவிட்டாய்!

பாரதியின் பெருமரபைக் காத்து நின்றாய்
பாவலனே புதுவைநகர்க் கவிஞர் கோவே!
பாரதிரப் புரட்சிப் போர்ப்பரணி பாடி
பைந்தமிழின் மானத்தைக் காத்து நின்றாய்
போர் உதிரம் பாய்ந்திடினும் பெருங்களத்தில்
புறங்கண்டு பகைதன்னை வென்ற வீரா
யாருண்டு உன்னைப் போல் நெஞ்சுரத்தில்
என்னகா ரணம் நீ எங்கே சென்றாய்?
நல்லவரைக் கொல்லுகின்ற நச்சுக் கூட்டம்
நாட்டிலே நிறைந்த பெரும்நலிவு கண்டோ!
கொல்லாமல் கொல்லுகிற அஹிம்சை வீரர்
கொடுமை நோய்க்கிருமிகளாய் ஆதல் கண்டோ!
பொல்லாங்கு பொய் சூதே தென்றலாக
போலிகளின் தன்னலமே உயிர் மூச்சாக
பல்லாண்டு பாடிவரும் இந்த நாட்டை
பார்த்ததினிப்போதுமெனப் போய்விட்டாயோ?
காலை இளவேனில்வரு கதிரவன் போல்
கனகமய ஒளிக்கவிதை கதிர்கள் தந்தாய்
சோலை''இலே சுதந்திரமாய்க் கூவுகின்ற
சொக்கு தமிழ்க்குயிலே நீ சென்னை வந்தாய்
பாலையெனக் காய்ந்துவரும் கலையை நம்பி
பலவிதமாய்ப் புதுப் பணிகள் காணவந்தாய்
மூலையிலே ஒதுங்குகின்ற கலையோ உன்னை
மௌனமாய்ச் செய்ததினி என்னே செய்யும்?

புரட்சிக் கவிஞர் பாரதி தாசனாரின் பெரும் பிரிவிலே நேர்ந்த துயரச் செய்தி.

## நாதக்குளிர் நதியே! நல்லமுதே!

நாடி நரம்பெங்கும்
  நல்லிதயம் மூச்செங்கும்
கூடி மகிழ்வித்துக்
  குளிர்விப்பாய் உயிரெல்லாம்
ஆடி அனுபவிக்கும்
  ஆனந்தநாத மழை
தேடி யுனையழைக்கத்
  தேரேறிப் போயினையோ?
தேடியுனை நாடித்
  தெற்குவரும் நண்பருக்கு
பாடி விருந்தளித்துப்
  பசியாற அமுதிட்டு
மோடி கிறுக்கேற்றும்
  மோகனப் புன்னகைதருவாய்
தோடியிசை தேடித்
  திருமகனே சென்றாயோ?
உருகாதா என்ற இசை
  உயிர்குழையும் நாதத்தில்
உருகிவரும் உன்னுள்ள
  வெள்ளத்து இனிமையிலே

உருக்கி எமைப் பாகாக்கி
உலகத்தை வசமாக்கும்
உருவற்ற வாளொலியின்
உடலாகப் போயினையோ!
இங்கிதமாய்ப் பழகியெமை
இன்னுறவு கொண்டவனே
சங்கீதத் தேன் கடலின்
சுவை ஞான முத்தொளியே
மங்காத ரத்தினத்தின்
மணிராஜ முடி சூடும்
சிங்கார வேலன் உனை
சிறைமீட்டுக் கொண்டானோ!
சின்னஞ்சிறு கிளியின்
செங்கனி வாய்ப்பாட்டமுதில்
உன்னழகுக் கீதத்தில்
உளங்குளிரும் விந்தையதைத்
தென்மலையின் சாரலிலே
கேட்ட தமிழ்ப் பாரதியும்
தன் ஞானரதந் தன்னில்
தானழைத்துப் போயினனோ!
கோயிலெல்லாம் குளிர்வித்த
கீதமழை காய்ந்ததுவோ
கோயில் பட்டியிலே
கோயில் கொண்டு விட்டதுவோ!
வாயில் வருமுன்பே
வரவேற்பாய் அவ்வுலக

வாயிலிலும் நண்பர்களை
வரவேற்கப் போயினையோ!!
நாற்பத்து இரண்டாண்டில்
நாதமுடிவாகி விட்டாய்
ஏற்பதுவோ இச்சோகம்
என்று கொலோ மாறுவது!
தோற்பதுவோ தூயஇசை
துவக்கத்தே முடிந்தகதை
போற்பறந்து போய்விட்டாய்
புகழ் கசந்து போனதுவோ!
வேதத்தின் வித்தென்பார்
விண்ணுதை வெளியென்பார்
போதப்பொருள் விரியும்
புத்தொளியே கீதமென்பார்!
நூதனமாய் நாடெங்கும்
நல்லமுதாய்ப் பாய்ந்திட்ட
நாதக்குளிர் நதியின்
நல்லூற்று வற்றியதோ?
ஆதியந்த மில்லாத
அருணசலக் கலையே
பூதவுடல் பழசென்று
புதியவுடல் வேண்டினையோ!
நாதவுடல் கொண்டு
நெடுவானக் காற்றெல்லாம்
ஓத இசைமயமாய்
ஓடோடிப் போயினையோ!

[illegible]
செத்துவிட்ட பிள்ளைகள்போல்
சீதமலர்ச் சோலை
சுட்டகரி ஆனதுவோ!
கீதப் பசுமலையும்
கருகியதோ எரிமலையால்?
ஊதுகுழல் ஜீவகலை
உயிரொடுங்கிப் போனதுவோ!
கோடையிடி தனியாக இடிப்பதில்லை
கொடுந்துயரம் தனியாக வருவதில்லை
மேடையிலே உன்னோடு வீற்றிருந்து
மேகத்தின் இடிகுரலும் மென்மையாக
ஆடாமல் அசையாமல் அவையைமட்டும்
ஆட்டுவித்த முழவோசை மன்னர்மன்னன்
தேடரிய திசைநோக்கிப்போன உன்னை
திரும்பி இங்கு அழைப்பதற்கோ அங்குவந்தான்?
நாடறிந்த நெடுந்துயரம் நேரலாமோ!
நாதலயம் நடுவிலே ஒடுங்கலாமா!
காடெரிந்து பறவையெலாம் கதறலாமா?
கலைமணிகள் இவ்வாறு மறையலாமா! ?

1964ம் ஆண்டு உலகுக்கு ஒரு அபாய அறிவிப்பாகி விட்டது. நாதஸ்வர இசை மேதை காருகுறிச்சி அருணசலம் அவர்களும், தவுல் மேதை நாச்சியார்கோயில் இராகவன் பிள்ளை அவர்களும் மறைவுற்ற செய்தி பொருது எழுதியது.

## ஓய்வு

ஊற்றிய உயிர்நெய் தீய்ந்ததா
    உணர்வின் திரியும் தீர்ந்ததா?
ஆற்றிய கடமையும் ஆனதா?
    ஆருயிர்த் தீபம் ஓய்ந்ததா?
ஈட்டிய நற்பொருள் தேய்ந்ததா
    இளமையின் இன்பம் சாய்ந்ததா!
வாட்டிய முதுமையும் வந்ததா
    வானுயிர்த் தீபம் ஓய்ந்ததா!

## தாமதமேன் ?

என்னருமை வங்கத்து
    மாதாவே! ஏங்குகிறேன்
உன்னழகைக் கொத்துகிற
    வீணர்களைச் சபிக்கின்றேன்
பண்பட்ட மதப்போதைப்
    படுகொலையைப் பகைக்கின்றேன்
என்சொல்லி ஆற்றிடுவேன்
    என்நெஞ்சு சுடுதம்மா!
உன்மைந்தர் என்றென்றும்
    ஊனறுந்த இரத்தமதில்
செந்நிறத்துச் சகதியிலே
    செத்துமனம் தத்துகிறார்
இந்நிலைக்கு முடிவிலையா?
    இரக்கத்தின் பேரினிலே
உன்னையின்று கேட்கின்றேன்
    உரை கூறத் தாமதமேன்?
தெருவெல்லாம் தீப்பிணமாய்ச்,
    சிரம்வெடிக்கும் சுடுகாடாய்க்
கருத்தரித்த பூவையரின்
    கட்டுவிடா மேனியெல்லாம்
உருக்குலைத்த வெறியர்களை
    உண்டுபண்ணும் போக்கிலியை

சுருக்கிட்டு எட்டிவெட்டித்
தூளாக்கத் தாமதமேன்?

தருத்தான குழந்தைகளைக்
குண்டான மாம்பழமாய்க்

குறையாக்கிச் சூறையிட்டுக்
கொட்டமிடும் குண்டர்களை

பருத்தாடும் பூதமெனப்
பல்லாண்டாய் மதப்போரைக்

கருத்தோடு காத்தாரைக்
கண்பிடுங்கத் தாமதமேன்?

இச்சையுற்ற வழியேகி
இறுக்குகிறார் வங்கொடியர்

அச்சமற்று அறங்கொன்று
அபலைகளைக் கற்பழிக்கும்

லச்சையற்ற காமுகரின்
நாத்தழுத்த கொழுப்பெரித்து

உச்சிமலை விளக்கேற்றி
ஒளி வீசத் தாமதமேன்?

குடல்தெறிக்கக் குண்டெறிவார்
குறிவைத்துக் குறும்பாகப்

பிடறிகளைப் புண்ணாக்கிப்
பொங்கியழக்கீறுகிறார்

கொடிறுடைந்த வேங்கைகளாய்க்
கர்ஜிக்கும் காலிகளைத்

துடிதுடிக்கத் தூக்கிலிட்டுத்
தாலாட்டத் தாமதமேன்?

சூல்கொண்ட மங்கையரின்
மார்கிழித்து அன்னைதரும்

பால்மணமும் மறந்தறியாப்
பச்சையிளம் பாலகரைத்

தோல்விண்டுக் கதவோடு
சேர்த்திறுக்கிச் சுத்தியினல்

கால்கெண்டைக் கணுவெங்கும்
கட்டாணி முள்ளடித்து

வெற்றியோ வெற்றியென்று
ஓலமிடும் ஊத்தையரை

சற்றேனும் கருணையில்லா
ஜாதிவெறிப் பேய்களினல்

முற்றுகின்ற முடிவின்றி
மூண்டெரியும் தீக்கடலிற்

பற்றியெழும் செங்குருதிப்
பழிதீர்க்கத் தாமதமேன்?

பட்டினியால் முன்சென்ற
பல லட்ச ஆவிகளே!

எட்டிநின்று ஏகாதீர்,
எக்களித்துச் சிரிக்காதீர்

மட்டரகக் காட்டெருமை
போல் முட்டும் மதமிருகர்

கட்டறுத்த வெறியாட்டைக்
    கழுத்தொடிக்கத் தாமதமேன்?
பாராளும் மதவெறியின்
    பழங்கந்தல் கட்சிகளே
சேருகும் இரத்தமழை
    கொட்டுவதும் காற்ருலோ?
யார் செத்தால் நமக்கென்ன,
    எனத் தூங்கும் மானிடரே!
ஊர்துடிக்கும் சண்டையெல்லாம்
    உம்மதிப்பு ஓங்குதற்கோ?
மங்காத மாணிக்க
    மரபொளிரும் வங்கமெனும்
சிங்காரத் தாய்நாட்டின்
    செல்வியருள் தனித்தேவி!
எங்கேனும் இதுபோன்ற
    இணையற்ற நரகுண்டா?
இங்கிந்தப் பொடியர்களின்
    இடையொடிக்கத் தாமதமேன்?
ஐப்பசியின் அடைமழை போல்
    அடங்காமல் விட்டுவிட்டுக்
கொப்புளித்துக் குலைகடிக்கும்
    கூன் எண்ணப்பாவிகளைச்
செப்புருக்கும் தீயிட்டுச்
    சேதித்துச் சிதைபோட்டு
முப்போதும் இலதாக்கி
    முளை கருக்கத் தாமதமேன்?

வங்கத்து மாதாவே!
வளமான பாரதத்தில்,
தங்கிய நற்பெருமைகளை
தமிழ்போலச் சொல்லிவரும்
இங்குனது இதயத்தே
ஈட்டியிடும் ஈனர்களின்
சங்கத்தை வேட்டையிட்டு
சாந்தியுறத் தாமதமேன்?
அந்தோ உன் நிகரற்ற
அணியான வீரமணிச்
சந்ததியே கதியற்றுச்
சந்தியெலாம் சாய்கின்றார்
சந்தையிலும் விலையாகாச்
சருகாக நாறுகிறார்
இந்தவினை செய்வாரை
என்ன செய்யப் போகின்றாய்?
எத்தனையோ பேரறிஞர்
இளங்காதல் வாலிபர்கள்
தத்துவத்தின் ஆசிரியர்
தலையெல்லாம் பனங்காயாய்க்
குத்திவிட்டுப் பழிபருகும்
கொடுஞ்சாதிக் குடியர்களின்
இரத்தகங்கை அலைமோத
நீகுளிக்கத் தாமதமேன்?
ஜாதிகுல நோய்தீர்த்த
ஜகவீரர் நேதாஜி

பேதமற்ற ஜீவனுக்கு
பிறப்பளித்த உன்னையின்று
சேதிக்கும் வெறியர்களைச்
செருக்கான சூலியரை
ஊதிவிட்டு நீறுக்கி
ஓட்டிவிடத் தாமதமேன்?
ஞாலத்து நாகரிகம்
நன்கறியா குருட்டாளிகள்
போலிமதப் புறக்கடையில்
பதுங்குகிறார் சாக்கடையில்
காலத்தின் பெருவோட்டம்
காதகரைச் சாடுமுன்னர்
சூலத்தால் சங்கரிக்கத்
துள்ளியெழத் தாமதமேன்?

*1946–ல் எழுந்த மதப் போரில் நடந்த அநியாயத்தைக் கண்டு குமுறிய உள்ளத்தில் எழுந்தது. 'கிராம ஊழியனில்' வெளியானது. மீண்டும் இன்று 1964–ல் கீழ்வங்கத்தில் மத வெறியின் எதிரொலி கேட்டதால் உள்ளமும் எதிரொலி செய்கிறது.*

